
# ஞானசம்பந்தம்

மலர் 12] நந்தன ௵ மார்கழி ௴ 10—1—53. [இதழ் 2

தருமபுர ஆதீன மடாலயம்:



முன்முகப்புப் பார்வை
(புயலுக்குப்பின் காணும் காட்சி)

ஆசிரியர் : நாகலிங்கத் தம்பிரான்.
உதவி ஆசிரியர் : தண்டபாணி தேசிகர்.
தருமபுர ஆதீன

## தருமபுர ஆதீனத்தில்

# மஹாலக்ஷ்மி துர்க்காதேவி ஆலய கும்பாபிஷேகம்

பராசக்தி ஆன்மாக்கள்மீது வைத்த கருணையால், அவரவர்களும், எந்த மனோபாவத்திலிருந்து தியானிக்கின்றார்களோ அந்தந்த நிலைக்கு ஏற்ப, ஞானத்தைத்தர பராசக்தியாயும், செல்வத்தைத்தர லக்ஷ்மியாயும், கலைஞானங்களைத்தரக் கலைமகளாயும், வெற்றியைத்தரத் துர்க்கையாயும் விளங்குகின்றாள் என்பது ஞானசாஸ்திரத் துணிபு. "எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்" என்பது சிவஞானசித்தியார். அவ்வண்ணமே பராசக்தியின் ஞான தனங்களைக் கொடுக்கும் அவசரமாகிய லக்ஷ்மிதுர்க்கையின் நூதனப் பிரதிட்டை, தருமபுரம் ஸ்ரீ தருமபுரீசுவரர் ஆலய வெளிப்பிராகார வாயுமூலையில், நூதனமாக நிர்மாணஞ்செய்யப் பெற்றிருக்கும் திருக்கோயிலில் நடத்துவிக்கப்படும். இத் துர்க்காதேவி மகா அனுக்ரக சொரூபியாய், பதினெட்டுத் திருக்கரங்களோடு அக்கமாலை, பரசு, கெதை, வில், வஜ்ரம், தாமரை, அம்பு, கமண்டலம், தண்டம், சக்தி, கத்தி, கேடயம், மணி, சங்கம், பானபாத்திரம், சூலம், பாசம், சக்ரம் இவற்றோடு காட்சியளிக்கிறாள். அம்மையின் திருமேனியோ செம்பவளத் திருமேனி. திருவுருவத்தில் செந்தாமரைப் பூவில் எப்படி எழுந்தருளியிருப்பதாகக் காண்கிறோமோ, அவ்வாறே அன்பர்களின் அகத்தாமரையிலும் வீற்றிருப்பாள் என்பதை அநுபவத்தில் அறிந்துய்யலாம்.

இத்தகைய சிறப்புற்ற தேவிக்கு நாளது **நந்தனஹூ தைமீ 13உ (26—1—53) சோமவாரம்** துவாதசி மிருகசீரிஷ நட்சத்திரம் கூடிய சுபதினத்தில், உதயாதி 17 நாழிகைக்குமேல் 18¾ நாழிகைக்குள், **(நடுப்பகல் மணி 1-30க்குள்)** விருஷப லக்னத்தில், **ஆவர்த்த அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம்** நடைபெறும். அவ்வமயம் வேதபாராயணம், திருமுறைப்பாராயணம், சொற்பொழிவுகள், இசைநிகழ்ச்சிகள் ஆகியனவும் நிகழும். அன்பர்களனைவரும் வந்து தரிசித்து இருமைப்பயனையும் எய்த விரும்பும்,

தருமபுரம்,
9—1—53.

தருமபுர ஆதீனம்,
ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் ஆணையின்வண்ணம்,
**சாமிநாதந் தம்பிரான்.**



மகாலக்ஷ்மி துர்க்கை.

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 12]      நந்தனஷு மார்கழிமீ 10—1—53.      [இதழ் 2

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினுய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

## எங்கள் எல்லை

மொழிவாரி மாகாண அமைப்புமுறை காங்கிரஸ் மகா சபையின் அடிப்படைத் திட்டங்களில் ஒன்றுதான். ஆனாலும் நாடு விடுதலை அடைந்து தன்பசியைத் தான்தீர்த்துக்கொள்ள வழிதெரியாமல் தவிக்கின்றநேரத்தில், இம்மாகாண அமைப்புத் தேவையா? அவசரந்தானா? என்று மத்திய அரசாங்கம் கஞ்சி வார்க்கும் தொழிலில் கவலைகொண்டு இருந்தது. எல்லாச் சகோதரர்களும் ஏதோ அரைவயிற்றுக்குக் கஞ்சிகுடித்து உயிரை வைத்துக் கொண்டிருந்தால் பிரிவினையைப் பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்று கொஞ்சம் மெதுவாக இருந்தது. ஆனாலும் அதற்குவேண்டிய சச்சரவு இல்லாத முறையில் ஆந்திர மாகாணத்தைப் பிரிக்க ஆவன செய்தேவந்தது. ஆனாலும் இன்று பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. காரணம் என்ன? பொட்டி ஸ்ரீராமுலு என்பவர் உயிரைத் தியாகம் செய்தார். எதற்காக? உயிரினும் இனியமொழியின் அடிப்படைகொண்டு தமது இனத்தார்க்கு நன்மை செய்யவேண்டும் என்ற கருத்தால்.

## கோணல் எங்கே!

இது கண்டுப்பிடிப்பதுதான் மிகவும் கஷ்டமான காரியம். பிரதமர் நேரு அவர்களும் விரைவில் பிரித்துக் கொடுக்கவேண்டும் என்று அறிவித்துவிட்டார். சென்னை அரசாங்கமும் அறிவித்து விட்டது. ஆனாலும், பிரிவினை தாமதப்படுகின்றது. காரணம் எல்லைத் தகராறு. தெலுங்கர்களுக்குள்ளேயே இப்போது சட்ட சபையில் இருக்கும் அதிகப்படியான ஆந்திர உறுப்பினர்களின் கட்சியைக் கண்டு அச்சம். எங்கே இன்று தெலுங்கு நாடு பிரிந்து விடுமானால் அவர்களுடைய ஆதிக்கம் ஓங்கி விடுமோ. தமக்குத் தலைமை கிடைக்காது ஒழியுமோ என்ற யோசனை. இதனால் எருமடைக்குத் தண்ணீர்ப் பாய்ச்சுவதுபோல் தீர்க்க முடியாத தேவையைத் தெரிவித்து விட்டால் குட்டையைக் குழப்பின கதையாக முடியும் என்று கருதுகிறார்கள். ஒரு சிலருக்கு உலக்கைக்குப் பிடித்தால் உளிப்பிடிக்குத் தேருதா என்பது எண்ணம். ஒரு சிலருக்கு நமக்கு இரண்டு கண்ணும் போனாலும் குற்றமில்லை எதிரிக்கு ஒரு கண்ணாவது தொலைய வேண்டும் என்ற இரக்கச் சிந்தனை. அதனால் சென்னை நகரத் தென்கோடிவரை வேண்டும் என்பார் சிலர். சென்னை நகரும் தற்காலத் தலைநகராக இருந்தால் போதும் என்று தட்டிக் கழிப்பார் சிலர். சென்னை தனிமாகாணம் ஆகும் தனிச் சிறப்புப் படைத்தது என்று சாதிப்பார் சிலர். இப்படி தெலுங்கர்களுக் குள்ளே இருந்த அபிப்பிராயபேதமே பொட்டி ஸ்ரீ ராமுலுவின் உயிரை உறிஞ்சி விட்டது. இதனை அடிப்படையாக வைத்துக் கொண்டு தெலுங்கக் கிளர்ச்சிக்காரர்கள் இச்சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொள்ளுகிறார்கள். இதனால் நாட்டினுடைய பொருளாதாரமும் அமைதியும் அழிவதோடு கூட, நாட்டின் கௌரவமும் பாதிக்கப்படுகிறது. அரசியல் வாழ்வு எப்படி ஆனாலும் இந்த எல்லைப்பிரச்சினை எங்கள் சமய வாழ்வையும் மிகப் பாதிக்கின்றது என்பதை நாங்கள் எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

எங்கள் ஞானசம்பந்தப்பெருமான் திருக்காளத்திமலைக்குச் சென்றார்கள். அங்கிருந்தே தமிழ்வழங்காத இடங்களாகிய ஸ்ரீ பருப்பதத்தையும் அநேகதங்காபதத்தையும் கயிலையையும் பாடினார்கள். இதிலிருந்து நேயர்கள் நினைவுக்குக் கொண்டுவர

வேண்டிய முக்கியமான செய்தி ஒன்று உண்டு. அதுதான் திருக்காளத்திமலேயே தமிழ்நாட்டின் வடக்கு எல்லேயிலுள்ள சிவஸ்தலம் என்பது. அவ்வாறே ஆருயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பனம்பாரனர் தமிழ்நாட்டின் வடக்கு எல்லேயை வேங்கடமாகச் சொன்னர். அகநானூற்றிலும் வேங்கடத்திற்கு அப்பாலுள்ள பகுதியை "மொழிபெயர்தேம்" எனக் குறிப் பிடப்படுகிறது. சிலப்பதிகாரத்தில் திருமால் நின்றகோலத்தில் எழுந்தருளி இருப்பதைத் திருவேங்கடக் காட்சியாகக்காணலாம். இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் 1953-ல் ஆந்திரமாகாணம் பிரியப் போகிறது என்பதை எண்ணி நிகழ்ந்தனவல்ல. சென்னே நகர் தங் களுக்குச் சொந்தமாகவேண்டும் என்ற தாராள நோக்கத்தால் தியாகராயநகரின் தென்கோடியிலும் கோடம்பாக்கத்தின் மேல் கோடியிலும் வீடுகள் வாங்கிக் கட்டிக்கொண்டதுபோல முன் ஏற்பாடான காரியங்கள் அல்ல. ஆதலால் சென்னேயோ, திரு வேங்கடமோ தமிழ்நாட்டைவிட்டுப் பிறநாட்டோடு என்றும் பொருந்தாது. பழந்தமிழ் மன்னர்கள் நாடு எல்லார்க்கும் பொது என்ற சொல்லே என்றும் பொறுக்காதவர்கள் என்று புற நானூறு பேசுகிறது. அந்த வழிவந்த தமிழர்கள் சென்னே யையோ திருவேங்கடத்தையோ விட்டுக்கொடுக்க மாட்டார்கள். கண்களேத் தியாகம்செய்து கடவுள்பக்தியை நிலேநாட்டிய காளத்தியை விட்டுக்கொடுக்கமாட்டார்கள். உயிரைத் தியாகம் செய்வதுலேசானகாரியம்; உபத்திரவம் தீர்ந்தவேலே. கண்களேத் தியாகம் செய்வதோ அத்தகையது அன்று. உள்ளவரையில் கஷ்டம். அத்தகைய ஞாபகச்சின்னமாகிய காளத்தியை விட்டுக் கொடுப்பதா? சமய உறைப்புடைய தமிழர்கள் செயலாகும். நன்ருக நினேத்துப் பாருங்கள்!

சென்னேபோனல் சங்கிலியாரை மணந்து, கண் இழந்து, கண்பெற்றுச் சமய உண்மையை நிலேநாட்டிய திருவொற்றியூர் எங்கே? எலும்பைப் பெண் ஆக்கிய திருமயிலே (மயிலாப்பூர்) எங்கே? சமயப் பாசறைகளாகிய இந்த இரண்டு இடத்தை இழந்து சைவர்கள் வாழ்வதா?

செந்தமிழ்க் கடவுளாகிய முருகனுடைய ஸ்தலங்களுள் திருத்தணிகைசிறந்தது. அதனே இழந்தால் தமிழ் உரம் எங்கே! 1911-ம் ஆண்டில் நிர்வாகவசதிக்காகப் பிரிட்டிஷ் அரசாங்கம்

சில ஆந்திரப் பகுதிகளையும் தமிழ்நாட்டுச் சில பகுதிகளையும் சேர்த்து, சித்தூர் ஜில்லா என்று பெயர்சூட்டிப் பிரித்தாண்டது. அதனை அரசியல் அறிவுடையார் அனைவரும் அறிவர். ஆதலால் அந்தப் பகுதிகளையும் ஆந்திரநாட்டோடு சேர்த்துவிடுதல் கூடவேகூடாது. அமைதியான வாழ்வு நடாத்தும் தமிழர்கள் இதற்காக வீண் கூச்சல்போட்டு விளம்பரப்படுத்திக் கொள்ள மாட்டார்கள். அமைதியான இடத்தில் உண்மை இருக்கிறது என்று அறிந்து அரசாங்கம் நடந்துகொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். எங்கள் சைவ வைஷ்ணவ ஸ்தலங்களுக்கு எந்தவகையிலும் இடையூறு நேராதபடி - தமிழ்ப் பண்பாடு மாறுதபடி ஏற்படும் மாகாணப் பிரிவினையை நாங்கள் அன்புடன் வரவேற்கிறோம்.

---

# பொங்கல் வாழ்த்து.

பொங்கற் புதுநாள் இன்றே புகுந்தது
கருணையின் உருவாம் ஒருவன திருதாள்
உருகிய அன்பொடு உளத்திடை எண்ணி
மக்கள் மகிழ்க; வளமெலாம் பெருகுக
கடவுள் கருணையால் காலம் கடவா -
திடமிடந் தோறும் இன்னருள் என்ன
மழைவளம் பொழிக; மாறிலா தென்றும்
செந்நெல் வெண்ணெல் தீஞ்சுவைக் கன்னல்
இஞ்சி மஞ்சள் பைங்கறி பிறவும்
செழித்துவளர்கஇச் செழிப்பெலாம்சிவனருள்
பொழிந்த வளனென புந்திகொண் டென்றும்
நன்றி மறவா நிலையில்
நாடெலாம் தழைத்து நன்கு வாழியவே.

தருமபுர ஆதீனம் இரண்டாவது மகாசந்நிதானம்

# ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆனந்தபரவச மூர்த்திகள்

தருமபுர ஆதீன ஸ்தாபகாசாரியராகிய ஸ்ரீ குருஞான சம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளால் ஆட்கொள்ளப் பெற்ற பின்பே இவர்கள் வரலாறு நாம் அறிந்துய்யும் நிலை யுடைத்தாயிற்று. இவர்கள் தமது பெயரமைதிக்கு ஏற்ப, குருமூர்த்திகள் காட்டியருளிய குறிவழிநின்று சிவாநந்தப் பெரும்போகத்தழுந்தித் தன்வசம் அழிந்து இருந்தார்கள். இவர்கள் தாம்பெற்ற குருரூபசிந்தனையாகிற சிவாநந்தா நுபவ நிலையை மற்ற அடியார்கட்கும் சொல்லாமற் சொல்லிக் காட் டாமற் காட்டிவந்தவர்கள்.

இவர்களுடைய அநுபூதிநிலையை, ஆசாரிய மூர்த்தி களாகிய ஸ்ரீ குருஞானசம்பந்தப்பெருமானே, ஆதீனத்தில் 3வது அருட்குருமூர்த்தியாய் விளங்கிய ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக மூர்த்திகட்குப் பரிபக்குவம் வரப்பண்ணுமுகத்தான்,

"தானந்த மாதிநடு வில்லா தோங்கும்
சச்சிதா நந்தமயந் தானேயாய
ஆனந்த பரவசனைக் கண்டுங் கண்டும்
அந்தந்தோ பரகதியை யறிந்தீரில்லை

என்று திருவாய்மலர்ந்தருளிய திருப்பாடலே நன்குவிளக்கும்.

இவர்களைத் தமது ஞானபீடத்து இருத்திச் சந்தானம் பாலித்தருள ஆணைதந்து ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக மூர்த் திகள் சிவயோக சமாதியில் எழுந்தருளினார்கள். ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச மூர்த்திகள் அதிதீவிரதர பக்குவர்களாதலின் குருவினுடைய சமாதித்தான ஆலயத்திற்கு மேற்கே அவர்கள் திருக்கோயில் சிகரத்தைப் பார்த்தவண்ணமாகச் சிவயோக சமாதியில் எழுந்தருளியுள்ளார்கள்.

இவர்கள் சமாதித்தானம் ஒரு பிரார்த்தனைத் தலமாக வழங்கிவருவதும், இந்தப்பக்கத்திலுள்ளார் அனைவருக்கும் ஆனந்தபரவசர் என்றாலே ஒரு அச்சமும் அன்பும் கலந்த உள்நிலை உண்டாவதும், அதனால் அவர்கள் இம்மை மறுமைப் பயன் எய்திவருவதும் கண்கூடாதலின் இவர்கள் மகிமை அளவிடற்பாலதன்று. இக்குருமூர்த்திகளின் குருபூஜைவிழா 3—1—53 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

# கோயில்கள் கலைக்கூடங்களெனப் போற்றிப் பாதுகாக்கவேண்டும்.

---

### பேசும் பெருமாள் மகிமைபற்றி

### ஸ்ரீ பக்தவத்சலம் அவர்கள் பிரசங்கம்

### ஆலய வழிபாடு ஏன்?

"உத்தியோகம் செய்பவர்கள் மன்றம் அமைத்துக் கொண்டு கலைக்காகப் பாடுபடுவது மிகவும் வரவேற்கக் கூடியது. கலை, மொழி, பக்தி ஆகியவை ஒன்றோடொன்று இயைந்துள்ளன. அவை எங்கும் சேர்ந்தே காண்கின்றன."

"ஆலயங்கள், அழிக்கமுடியாத கோபுரங்கள், பிரம் மாண்டமான மதில் சுவர்கள் ஆண்டவனுக்கு இருப்பிடம் தேடித்தர அமைக்கப்படவில்லை; நம்முடைய நல்வாழ்வுக்காக நம் முன்னோர்கள் அளித்த கலைச் செல்வங்கள்; ஆண்டவனை எங்கும் காணலாம்; எங்கும் வழிபடலாம்; ஆனால் இது போன்ற ஆலயங்களில் வந்து வழிபடுவதால் மனதில் அமைதி நிலவுகிறது. அதனால் நம்மைத் திருத்திக் கொள்வதோடு மன உறுதியையும் பெறுகிறோம். மன உறுதியிருந்தால் எதையும் சாதிக்கலாம்"

"ஆண்டவன்மீது பாரம் போட்டுவிட்டு எதையும் செய்ய லாமென்ற அசட்டு நம்பிக்கை கூடாது. உலகம் வாழ நான் வாழவேண்டும் என்ற பரந்த மனப்பான்மை இருக்க வேண்டும். செம்மையான வாழ்வுக்குக் கலை உணர்ச்சி வேண்டும்; அன்று அடியார்களோடு கடவுள் பேசியதாகப் படிக்கிறோம்; கேள்விப்படுகிறோம்; இது நடந்திருக்க முடியா தென்று சிலர் எல்லாந்தெரிந்தவர்களைப்போல் பேசுகிறார்கள்."

53



## பேசும் பெருமாள்!

"ஆனால் இக்கோயில்களைக் கட்டிய சிற்பிகள் விக்கிரகங்களைப் பேசவைத்திருக்கிறார்கள். இன்றும் அவை நம்முடன் பேசுகின்றன. உதாரணத்துக்கு ஒன்று கூறுகிறேன். கதர்க் கண்காட்சி சாலையின் கலைப்பகுதியில் 'பேசும் பெருமாள்' என்றொரு விக்ரகம் வைக்கப்பட்டுள்ளது. அந்த விக்ரகத்தின் அங்கங்களில் சப்த சுவரங்களும் கேட்கின்றன. மற்றும் சுசீந்திரம் கோயிலில் உள்ள தூண்கள் சப்த சுவரங்களை ஒலிக்கின்றன. நம்நாட்டு நடராஜ விக்கிரகத்தில் அயல் நாட்டார் கலையைக் காணுகிறார்கள். இதை எவ்வளவு விலைகொடுத்து வாங்கவோ அல்லது திருடவோகூட முயற்சிக்கின்றார்கள். உத்திரன்மேரூரில் உள்ள கோயிலில் 1000 வருடங்களுக்கு முன் கிராமவாழ்க்கை எவ்வாறு நடத்தப்பட்டதென்று கல்வெட்டு இருக்கின்றது. கோயில்களைக் கலைக்கூடங்களாக மதித்துப் பாதுகாக்கவேண்டும்"

—பாரததேவி, 3—1—53.

---


## "ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0.

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்,
தருமபுரம், மாயூரம் P. O.

5/4



# பொய்யில் காட்சியோர் பொருளுரை

## கடவுளைக்கண்ட வாய்மை

புலவர், முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்,
தமிழ்ப்பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

கடவுள் என்பது இயவுள், விக்குள் என்பவை போலும் ஒரு தமிழ்ச்சொல். உள் என்பது, இக்காலத்து விகுதி என்று கூறப்படினும், அக்காலத்தில் அவ்வாறு கொண்டு கூறப்பட்ட தில்லை. இயக்குதலுள்ளது இயவுள். விக்குதலுள்ளது விக்குள். அவ்வாறு கடத்தலுள்ளது கடவுள் என்றாகும். கடத்தல் என்னும் தொழிலுக்குச்செயப்படுபொருளாகமாயேயம், மாயை, கன்மம், மலம் என்னும் பாசக்கூட்டத்தையும் பசுக்கூட்டத் தையும், அப்பசுக்களின் மனம் வாக்குக்களையும் கருதுவது அறிவுடைமையைக் குறிக்கும்.

'கண்ணுங் கருத்துங் கடந்ததொரு பேறு'.
'எல்லாங் கழன்ற இடமே சிவம்என்று
சொல்லா டுவர்கழன்ற தூயோர்கள்.'

என்னுந் திருக்களிற்றுப்படியார் துகளறுபோதவசனமும், 'மாற்றம் மனங்கடந்து நின்ற மறையோன்' 'கரணங்கள் எல்லாம் கடந்து நின்ற கறைமிடற்றன்' என்னுந் திருவாசக மும் இங்கு நோக்கத்தக்கன.

அவ்வாறு பசுபாசங்களைக் கடந்ததொரு மெய்ப்பொருளை அவ்விடத்து நின்று கண்டவரே அருளாளர் ஆவர். சைவசமயா சாரியார் நால்வரும், சந்தானசாரியார் நால்வரும், அவர் வழி யொழுகிய சான்றோரும் அவ்வருளாளரே. அதனை மெய்ப்பிக்கப் பல சான்றுகள் அவரவர் அருளிச்செய்தவற்றுள் இருக்கின்றன.

பெருநெறிய பிரமாபுரம் மேவிய பெம்மானை ஒருநெறிய மனம் வைத்துணர்(ந்த) ஞானசம்பந்தன் உரைசெய்த திரு நெறிய தமிழ்வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதா'யின், அவர் வினையின் நீங்கி விளங்கிய முதல்வர் என்பதில் ஐயம் ஏற்படுமோ?

55

'மலையினுர் பருப்பதம் துருத்திமாற் பேறு
மாசிலாச் சீர்மறைக் காடுநெய்த் தானம்
நிலையினுன் எனதுரை தனதுரை யாக
நீறணிந் தேறுகந் தேறிய நிமலன்'

என்றதில், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் திருவாய் மொழியே சிவபெருமான் திருமொழியாகும் உண்மை குறித்த வாறு காண்க. இன்றேல் 'காழிஞானசம்பந்தன், பழிகள் தீரச் சொன்ன சொல் பாவநாசம் ஆதல்' கூடுமோ? "சொற்றுணை வாழ்க்கை துறந்து உம்திருவடியே அடைந்தோம்" "கண் இமை யாதன மூன்றுடையீர் உம்கழல் அடைந்தோம்" என்று இறந்த காலத்தாற் கூறியதும், அடைந்தாலும் அவ்விறைவனை இடை விடாது உணர்வதால் 'உணர் ஞானசம்பந்தன்' என வினைத் தொகையாகக் கூறியதும் கருத்தில் இருத்தற்பாலன,

திருநாவுக்கரசு நாயனுர், 'வலம்புரத்து அடிகள்தம்மை நான் அடைந்து ஏத்தப்பெற்று நல்வினைப்பயன் உற்றேனே',

'ஓர்த்துள வாறுநோக்கி உண்மையைஉணராக் குண்டர்
வார்த்தையை மெய்என்றெண்ணி மயக்கில்வீழ்ந் தழுந்துவேனை
பேர்த்துஎனை ஆளாக்கொண்டு பிறவிவான் பிணிகள் எல்லாம்
தீர்த்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வனுரே.'

'தெள்ளியே னுகிநின்று தேடினேன் நாடிக் கண்டேன்' என்று கடவுளை அடைந்து கண்டதும் அன்றி, அவரோடு உரையாடிய திறத்தினை,

'வெள்ளநீர்ச் சடைய னுர்தாம் வினவுவார் போல வந்தென்
உள்ளமே புகுந்து நின்ருர்க்கு உறங்கும்நான் புடைகள் போந்து
கள்ளரோ புகுந்தீர் என்னுக் கவர்ந்துதான் நோக்கி நக்கு
வெள்ளரோம் என்று நின்ருர் விளங்கிளம் பிறைய னுரே.''

என்ற திருநேரிசையா லறிவித்தருளினுர். அவ்வாறே நமக்கும் அப்பேறு வாய்க்க,

" நீலக்குடியரன்
மையலால் மறவா மனத்தார்க்கெலாம்
கையில்ஆமலக் கனி ஒக்குமே"

58



என்றுபதேசித்தருளினர். 'சங்கரன் ... கொய்ம்மலர்ச் சேவடியிணையே குறுகினோம்' 'சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்' 'எண்குணத்துளோம்' 'எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால் கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்' என்று உடம்பாட்டிலும், எதிர்மறையிலும் உணர்த்தியவற்றால், அப்பர் கடவுளைக்கண்ட வுண்மை நன்கு புலனாகும்.

சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய முதலும் முடிவும் ஆகிய திருப்பதிகம் இரண்டுமே அவர் கடவுளைக்கண்ட வுண்மைக்குப் போதிய சான்றுகளாம். இடையில் உள்ளவற்றிலும் பற்பல இடங்களில் அவர் கடவுட்காட்சியை அறிவித்தருளினர். அவர் கடவுளொடு பேசிய திறமெல்லாம் ஏனையோரிடத்தினும் மிகுந்துள்ளன.

மாணிக்கவாசகர், 'மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்' 'மழக்கையிலங்கு பொற்கிண்ணம் என்றலால் அரியை என்று உனைக் கருதுகின்றிலேன்' 'களித்தனன் நின்னைக் கண் உறக் கண்டுகொண்டு இன்றே' 'சித்தம் சிவம்' 'செய்தன தவம்' 'நிச்சம் என நெஞ்சில் மன்னி யான் ஆகி நின்றான் திருப்பெருந்துறை இறைவன்' என்றருளியவற்றால், கடவுளைக்கண்ட உண்மை புலனாகும்.

சந்தானசாரியர் முதலியோர் கடவுட் காட்சிக்கு அவரவர் செய்த சாத்திரமும் தோத்திரமும் சான்றாயுள்ளன. இவ்வாறு கடவுளைக் காண்பதற்கு வழியாக அவர்கள் கூறுவன பல உள. அவற்றுள். உரையும் உணர்வும் அறுது அறுவதே கடவுளைக் காண்டற்குச் சிறந்த வழி என்றனர்.

'**உரை உணர்வு** இறந்து நின்று உணர்வதோர் உணர்வே' என்ற திருவாசகத்தை உணர்மின். இவ்வழியல்லாத வழிகள் எல்லாம் இவ்வழியைத் தோற்றாமல் நின்றால், அவற்றைப் பொருட்படுத்தார் மக்கள்.

அரியபெரிய வழியாகிய இதனை அக்குருபரம்பரையிற் பெற்று நின்றொழுகிச் சிவமாகிய குருஞானசம்பந்தர்,

57

"உறைஇறந்தால் உன்னும் உணர்விறந்தால் மாயைத்
திரைஇறந்தால் காண்கின்ற தேவை — வரைபெருக
வாசிப்பதும் நாவால் வாழ்த்துவதும் நாடகமாப்
பூசிப்பதும் சுத்தப் பொய்"

என்று அவ்வழியை வற்புறுத்தியும், அஃதல்லாத வழிகளைப் பொய்யுறுத்தியும் பாடியருளினர். அருளினும், அவ்வழிகளெல்லாம் வேண்டாதன என்று விபரீதமாகக் கருதலாகாது. அடிப்படையான வழிகளையும் முடிவான வழியையும் அவற்றின் இடையிலுள்ளவற்றையும் ஆராய்ந்து, முடிவைத் தெளிந்து அடைந்த பின்பு, பிற எல்லாவற்றையும் விட்டு முடிவையே அநுசரித்தல் நன்று. ஞானியரும் புறப்பூஜையை விடாமற் செய்தே வரக்கடவர். சித்தியாரில் 'புறம்பேயும் அரன்கழல்கள் பூசிக்க வேண்டில்' என்றதன் உரையில் சிவஞான மாமுனிவர் எழுதியருளியதாலும், ஞானபூஜா விதியில், 'அர்க்கியம் ஒன்று ஆக்கி அந்நீர் சுத்திசேர்வித்து அண்ணல் திருவடி விளக்கி' என்று சுருக்கம்உற்ற பூஜையை முன்னர்ச்செய்து முடிக்கும்படி கட்டளையிட்டதும், பின்பு 'சிற்பரமாந் தற்பரத்துள் அழுந்தி, நீங்குந்தீங்கு அகலத் தூங்கு' என்று 'உரை உணர்விறந்து நின்றுணர்வதோர் உணர்வு' ஆகிய உண்மை ஞானத்தை எய்துமாறு ஏவி, அதன்மேல் 'ஒருமை திரிந்ததாகில் சொற்பதமாம் ஞானநூல் ஓதலாதி தொடங்கு' என்று உபாய ஞானத்தை உறுமாறு பணித்து, அதன்பின்னும், 'அவையும் மடங்கில் அருட்டொழில் தொடங்கு' என்று விரிந்த பூஜையைச் செய்துவரும்படி விதித்த சைவத் திருநெறியை அறிக.

---


தருமபுர ஆதீன வெளியீடு.

"திருக்குறள் - உரைவளம்" பொருட்பால்

கிரௌன் 1x4 சைஸ் 1128 பக்கங்கள்.

காலிகோ கட்டிடம் விலை ரூ. 13—8—0

தபாற்செலவு வகையரு ரூ 1—8—0

அறத்துப்பால் கைவசம் இல்லை

கிடைக்குமிடம் ;- மானேஜர்,
தருமபுர ஆதீனம்,
தருமபுரம், மாயூரம் P. O.

# கந்தபுராணத்தில் காவியச்சுவை

வித்வான், திரு. கண்ணப்ப முதலியார் அவர்கள், P. O. L.,

சென்னை.

(சென்ற மாதத் தொடர்ச்சி)

பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், கந்தபுராணம் போன்ற இப்புராணங்களைப் புராணக் கண்கொண்டு பார்ப்பதிலும் காவியக்கண்கொண்டு காண்பது ஒரு தனிச்சிறப்பும் ஒரு தனிச்சுவையும் ஆகும். புராணமாகப் பார்க்கும்போது பக்திச்சுவையும் அன்புச்சுவையும்தான் நம் கண்முன் வந்து காட்.சி அளிக்கும்: ஆனால் அவற்றைக் காவியமாகக் காணும் போது இன்பச்சுவையும் இலக்கியச்சுவையும் இனிது தோன்றி நிற்கும். தெய்வப்புலமைச் சேக்கிழார்பெருமானுக்கும் தம் நூல் புராணமாக இருப்பதோடல்லாமல் காவியமாகவும் திகழ வேண்டும் என்பதற்கேற்பத் தம் போக்கையும் சிறிது மாற்றிக் கொண்டதைப் பெரியபுராண அமைப்பினின்றே நாம் நன்கு உணரலாம், தொண்டர்சீர்பரவுவார் தம் நூலைக் காவியப் போக்கில் அன்றோ அமைத்துப் பாடியிருக்கின்றார். இல்லையானால் அறுபான்மும்மை நாயன்மார்களில் ஒருவரான சுந்தரமூர்த்தி சுவாமிகளையும் அப்பர், சம்பந்தர் புராணம்போலப் பாடாமல் அவர் வரலாற்றை முதலில் துவக்கி இடையிடையே இணைத்து ஈற்றில் முடித்துக்காட்டி இருப்பரே. இதனால் தாம் எடுத்தியம்பும் காவியத்திற்குத் தன்னேரில்லாத் தலைவன் ஒருவனை அமைத்துக்கொண்டு பேசவேண்டும் என்னும் பெருநோக்கங்கொண்டன்றோ அங்ஙனம் அமைத்துக்கொண்டார். அதனால் அவரும் காவியச்சுவையை நனி விரும்பினர் என்பது புலனாகிறது. ஆதலின் கந்தபுராணத்தையும் காவியமாக நாம் கருதி அதன் கவிச்சுவையைத் துய்க்கவேண்டும். காவிய இலக்கணத்தைத் தண்டியலங்காரம் நன்கு எடுத்து இயம்புகிறது.

அவ்விலக்கண அமைப்பு முற்றும் நம் கந்தபுராணத்தில் பொருந்தி இருக்கிறது. சிற்சிலவற்றைக் காண்போம்.

கந்தப்பெருமான் தன்நிகர் இல்லாத் தலைவன் என்பது,

மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினல் அளக்கொ ணமல்
நிறைவுடன் யாண்டும் ஆகி நின்றிடும் நிமல மூர்த்தி
அறுமுக உருவாய்த் தோன்றி அருளொடு சரவ ணத்தின்
வெறிகமழ் கமலப்போதின் வீற்றிருந் தருளி னனே.

என்னும் பாட்டாலும்,

விரிஞ்சன்மால் தேவ ராலும் வெலற்கரும் விறலோன் ஆகிப்
பெருஞ்சுரர் பதமும் வேத ஒழுக்கமும் பிறவும் மாற்றி
அருஞ்சிறை அவர்க்குச் செய்த அவுணர்கோன் ஆவி கொள்வான்
பரஞ்சுடர் உருவாய் வந்த குமரனைப் பணிதல் செய்வோம்.

என்னும் பாட்டாலும்,

மாயையின் வலியோன் ஆகி மால்முத லோரை வென்றே
ஆயிரத் தோரெட் டண்டம் அரசுசெய் துகநூற் றெட்டுக்
காயம தழிவின் ருகிக் கடவுளர்க் கலக்கண் செய்த
தீயசூர் முதலைச் செற்ற குமரன்தாள் சென்னி வைப்பாம்.

என்னும் பாட்டாலும் தெற்றத்தெளிய விளங்கும்.

நாற்பொருள் பயக்கும் நடைநெறித்தாகி என்ற இலக்கணம் அமைந்திருப்பதை,

இந்திரர் ஆகிப் பார்மேல் இன்பமுற் றினிது மேவிச்
சிந்தையில் நினைந்த முற்றிச் சிவகதி அதனில் சேர்வர்
அந்தமில் அவுணர் தங்கள் அடல்கெட முனிந்த செவ்வேள்
கந்தவேள் புராணம் தன்னைக் காதலித் தோது வோரே.

என்ற புராணப்பயன் உணர்த்தும் பாடலாம் உணரலாம்.

இனிக்காவியச் சுவைக்குரிய கவிகளைக் காணும்போது ஏனையவற்றிற்குரிய உதாரணங்களை ஒரு சிறிது காண்போமாக. காவியச் சுவையைக் காணவிழைந்த நம்மை, காதலர் பூக்கொய் இடத்தும் புனல்விளையாட்டிடத்தும் சென்றுகாண விட்டுவிடுகின்றனர் ஆசிரியர். ஆகவே ஆண்டுச்சென்றே அச்சுவையை நுகர்வோமாக:

காதலர் இருவர் பொழிலில் சென்று இன்பம் துய்க்கப் புறப்பட்டனர். உள்ளே நுழைந்ததும் இருவரும் சிறிது

தணந்தனர். காதலன் புன்னகமரத்தையும் வேங்கை விருட்சத்தையும் கண்ணுற்றான். அந்த இரு தருக்களின் தண்ணிய மலர்கள் இவன் உள்ளத்தைக் கவர்ந்தமையால் அவற்றுள் சிலவற்றைப் பறித்துக்கொண்டு ஓடோடியும் வந்து தன் அருமைக்காதலியை நோக்கிப் 'பெண்களுக்குள் பேரரசியாய்த் திகழும் என் உயிர் ஓவியமே! இதோ பார் வேங்கைப்பூவும், புன்னகப் பூவும். இவற்றை உன் கூந்தலில் சூட்டிக்கொள்க' என்றான். இவ்வளவுதான் அவன் கூறியமொழிகள். இவன் கூறியபோது அவள் ஒரு பளிங்கு மேடையில் அமர்ந்திருந்தவள் ஞரேல் என எழுந்தாள். தன் கணவனைக் கண்களால் சுட்டுக்கொல்வாள்போல் உறுத்துப்பார்த்து 'என்ன கூறினீர்; நான் பெண்களுக்கெல்லாம் பேர் அரசியா? அப்படியானால், உமக்கு என்போல் காதலுக்குரிய மாதர் எத்தனைபேர் உளர்? தெரிந்தது உம் கள்ளத்தனம்' என்று சீறிச்சென்றாள். இவ்வோவியத்தைக் கந்தபுராண ஆசிரியர்,

மின்னார் தமக்கோர் அரசே வெறிவேங் கைவீயும்
புன்னா கவீயும் கொணர்ந்தேன் புனைகிற்றி என்ன
மன்னா உனக்குப் பலருண்டுகொல் மாதர் என்னாத்
தன்னா வியன்னான் தனைச்சீறி யோர்தையல் போனாள்.

என்று தீட்டியுள்ளார்.

'யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று'

என்ற வாய்மொழியை இப்பாட்டு எண்ணுதற்கு இடங் கொடுக்கிறது.

சில காதலர் நீரில் குளித்து விளையாடுகின்றனர். அங்கு நிகழும் நிகழ்ச்சிகளைக்கூறும் கவிகள் கழிபெருஞ் சுவையைக் காட்டவல்லனவாய் விளங்குகின்றன.

ஆணும் பெண்ணுமாகிய இருதம்பதிகள் நீண்டநேரம் நீரில் கிடந்து நீராடினர். அதனால் இதழ் வெளுத்துக் காட்டியது. இவ்வெளுப்பு நீராடியதால் வந்தது என்பதை அறியாத நங்கை தன் நாயகன்மீது குற்றம் காட்டிக் கோபித்துக்கொள்ள,

'நாயக! நான் உன்னோடு கூடவே இருக்கிறேன்; நீயும் என்னைத் தணந்து சென்றிலை; இந்த நிலையில் உனக்கு இன்பம் தந்து இதழை வெளுப்பாக்கியவள் யார்? என்னையறியாது இப்படி நீ நடந்துகொண்டாயோ' என்று சீறிக் கரையேறி விட்டாளாம்.

உட்டெளி வில்லா நங்கை ஒலிபுனல் தடத்தி னூடும்
கட்டழ குளதோர் காளை கவர் இதழ் வெளுப்பு நோக்கிக்
கிட்டியான் நிற்க உன்றன் கேழ்கிளர் அதரத் தெச்சில்
இட்டனள் யார்இங் கென்று வெகுளிகொண் டிகலிப் போனாள்.

என்பது அச்சித்திரம்.

அதே தடத்தில் மற்றொருசார் மற்றொரு நாடகம் நடத்தப் பட்டது. இருகாதலர் கையினால் ஒருவரை ஒருவர் பிணித்துக் கொண்டு நீரில் திளைத்து இன்புற்றிருந்தனர். திடுமென அத் தையல் தன்நிழல், அத்தடத்தில் தோன்றக்கண்டாள். அதனைத் தன் நிழல் என்று தெளிந்திலள். அதனைத் தன்னைப்போன்ற மற்றொருத்தியின் உருவென்று கருதி, அவள் தன்னை மறைத்துக் கொள்ள நீரில் மூழ்கி யிருப்பதாகவும் எண்ணிக்கொண்டு, தன் கணவனைப் பார்த்து 'ஓஹோ என்னை அறியாது இவளோடு நீ கூடி மகிழ்ந்தனையோ' என்று சீறிப் பிணித்த கையையும் உதறிவிட்டுக் கரைக்கு வந்துற்றாள். இவள் நடிப்பை ஆசிரியர் கச்சியப்பர்,

தத்தையை அனைய சொல்லாள் ஒருத்திதன் நிழல்தன்னை
அத்தடந் தன்னில் நோக்கி எளியனை அறியா திண்டோர்
மைத்தடங் கண்ணி னாளை மருவினை என்று கேள்வன்
கைத்தலம் தன்னைவிட்டு வெகுண்டனள் கரையில் போனாள்.

என்று சுட்டிக் காட்டினர்.

குடித்து மயங்கிய ஒருத்தியின் செயலைச் சுவைபடப் பாடினார் புலவர் பெருமான். இதிலிருந்து கட்குடியால் மதி மயங்கிப்போகும் நிலையை நன்கு உணர்த்தியும் காட்டினர். ஒருத்தி நன்கு குடித்துவிட்டாள். குடி மயக்கால் தன் அறிவு

மயங்கினுள். தன் நிழலைப் பார்த்தாள். தந்நிழல் தன்னேடு வரும் என்னும் பழமொழியும் மறந்தாள். அந்நிழலைப் பார்த்து அது தன்னைப்போன்ற ஓர் உயிர்ப்பொருள் என்று கருதி 'என்னேடு பிறந்தாய்; என்னைவிட்டு நீங்காது என்பின் வந்து கொண்டிருக்கிருய்; நான் இம்மதுவை அருந்து என்ருலும் அருந்தாமல் நிற்கிருய்; இது முறையன்று; யான் உன்னை இவ்வளவு கெஞ்சிக் கேட்கினும் பேசாமல் இருக்கிருய்' என்று தன் நிழலைநோக்கிக் கசந்து. வெறுத்துப்பேசித் தளர்ந்தனளாம்.

என்னெடே தோன்றினுய் யான்எனும் தன்மையால்
யாதும் வேண்டாய்
பின்னரும் முன்னுமாய் வைகலும் திரிகுவாய் பிரிகி லாதாய்
இன்னரு உண்கென உதவினும் கொள்கிலாய் என்றெருத்தி
தன்னதாம் நீழலோ டுடினுள் வாடினுள் தளர்தல் உற்ருள்.

என்பது கந்தபுராணப் பாடல்.

இங்ஙனம் தன்நிழலோடு போராடிய காட்சியை மணிமேகலையிலும் காணலாம். அது,

தொழூஉம் எழூஉவும் சுழலலும் சுழலும்
ஓடலும் ஓடும் ஒருசிறை ஒதுங்கி
நீடலும் நீடும் நிழலொடு மறலும்''

என்பது.

சிற்சில காளைகளின் எண்ணக் குறிப்பையும் சுவைபடக் கூறி இன்பம் ஊட்டுந்திறன் இந்நூலுக்கு உண்டு.

ஒரு மாது சென்றுகொண்டிருக்கிருள். அப்படிச் செல்கையில் காற்றின்வேகத்தால் அவள்மேலாடை சிறிது விலகியது. அப்படி விலகியபோது அவளது கொம்மை வெம்முலை, தோற்றம் அளித்தது. அதனைக்கண்ட ஒரு தூர்த்தன் காட்சி அளவில் என் சிந்தையை மயக்கிய இக்கொங்கை, ஸ்பரிசத்தினுல் எத்தகைய இன்பம் பயக்குமோ என்று ஏங்கினுன் என்னும் பொருளில்,

அரிசனம் மேனி நல்லாள் அணிதுகில் அசைவின் சீரால்
கரிசனம் அன்னகொங்கை காண்டலும் தளர்ந்தோர் காளை
தெரிசனம் தன்னில் ஈதென் சிந்தையைப் பிணித்த தென்றால்
பரிசனம் தனில்என் னுமோ என்றுயிர் பதைத்து நின்றான்.

என்று அப்பாட்டுத் திகழ்கிறது.

காவியச் சுவைக்குத் தற்குறிப்பேற்ற அணியாக அமைந்த கவிகளும் கழிபேர் இன்பம் பயப்பனவாகும். அத்தற்குறிப்பேற்ற அணிகளும் சுவைபடக் கந்தபுராணத்தில் காணக்கிடக்கின்றன. மாலைப்பொழுது வந்துற்றது. மாலையானதும் தாமரை மலர்கள் தம் இதழ்களைக் குவித்துக்கொண்டு காலையில் மலரும். அப்படி அம்மலர்கள் குவியும் தருணத்தில் வண்டுகளும் அம்மலருள்ளே அகப்பட்டுக் கொள்வதுண்டு, அதனை எத்துணைச் சுவைபடக் கவி கூறியுள்ளார் பாருங்கள். வண்டுகளைத் திருமாலாகக் கருதினார். தாமரைகளைத் திருமகளாக எண்ணினார், ஆகவே வண்டாகிய திருமாலைத் தாமரையாகிய திருமகள் இதற்குள் இருளும் வந்துவிட்டமையால் - தம் இதழ்களாகிய கதவுகளைப் பூட்டிக்கொண்டு இரவெல்லாம் இன்புற்றிருந்தாள் என்பதை,

கங்குல்வந் திறுத்த காலைக் கடிமனைக் கதவம் பூட்டிச்
செங்கண்மால் தன்னைப் புல்லித் திருமகள் இருந்தாள் என்னக்
கொங்கவிழ் கின்ற செங்கேழ்க் கோகன தங்கள் எல்லாம்
பொங்கிசை மணிவண் டோடும் பொதிந்தன பொய்கை எங்கும்.

என்று பாடினார்.

இதுபோலவே சூரியன் மறைவைத் தற்குறிப்பேற்ற அணியாக மொழிகையில் பெருஞ்சுவைதோன்றப் பேசியுள்ளார்.

காசிபர்க்குத் திதி, அதிதி என்னும் இருமனைவியர் உண்டு. திதியின் வயிற்றில் பிறந்தவர்கள் அசுரர்கள். அதிதியின் வயிற்றில் தோன்றியவர்கள் தேவர்கள். அம்முறையில் சூரியனுக்குத் தந்தையாய் விளங்குபவர் காசிபமுனிவர். இங்கு மாயை என்பவள் காசிபரைக் காதலித்து அவரோடு கலவை இன்பம் துய்க்க வந்தாள். அவள் வந்த நேரம் மாலை நேரம். சூரியன் மறையும்

காலம். இச்சந்தர்ப்பத்தில் கவி வெகு அழகாக அந்தச் சூரியன் மறைவை,

தந்தைகா சிபன்என் றேதும் தவமுனி அவன்பால் சார
வந்தவள் ஆயே அன்றே ! மற்றிவர் தலைப்பெய் கின்ற
முந்துறு புணர்ச்சி காண்டல் முறைகொலோ புதல்வர்க் கென்னு
சிந்தைசெய் தகன்றான் போன்று தினகரக் கடவுள் சென்றான்.

என்று பாடியுள்ளார்.

காவியத்திற்கு எத்துணை கவிகள் சுவைதந்து நிற்பினும் நகைச்சுவை ததும்பும் கவிகள் இல்லாமற்போயின் அது பெருங் குறைபாடுடையதேயாகும். அந்நகைச் சுவைக்குரிய கவிகளும் பல கந்தபுராணத்தில் மிளிர்கின்றன. அவற்றிற்கும் சில உதாரணங்களைக் காட்டுவோம்.

இரவில் சந்திரன் அவ்விரவு என்னும் மாதுடன் கலந்து இன்பம் நுகர்ந்திருந்தான். அப்படி இன்புற்ற இரவு என்னும் நங்கை தான் உடுத்தியிருந்த இருள் என்னும் ஆடையையும் நீத்திருந்தாள். பொழுது புலரும் சமயம் சூரியன் புறப்பட்டு விட்டான். அதனை அறிந்த இரவு நங்கை தன் செயலைச் சூரியன் காணின் நகைக்கு ஏதுவாகும் என்று கருதி அவ்விருள் என்னும் ஆடையை உடுத்திக்கொண்டு ஓடிப்போனாள் என்னும் பொருளில் பாடியுள்ளார்.

மையிருள் கலையினை மகிழ்நனும் மதிநிலாக்
கையினால் நீக்கியே கலவிசெய் தகலுழி
வெய்யவன் வருமென வெள்கியத் துகிலுடீஇ
ஒய்யெனப் போயினள் கங்குல்என் றுற்றுளாள்.

என்னும் பாடலைப் படிக்கையில் நகைதோன்றாமல் இருக்க இயலுமோ ?

இந்நகைச் சுவைக்கு மற்றொரு பாவையும் படித்துப்பார்ப்பீராக. மாதர் சிலர் யானையின்மீது ஏறிவருகின்றனர். அப்படி அவர் ஏறிவருதலைக் கவி கூறுகையில் அந்த யானை இம்மாதர் நடைக்குத் தோற்றுப் போனமையால் தோற்றவர் வென்ற

வரைச் சுமந்து, தம்தோல்வியை ஒப்புக்கொள்வதைக் காட்டு கிறது என்பதைப் படிக்கும்போது சிரிப்பதில்லை என விரதம் கொண்டவரும் சிரிக்காமல் இருக்கமுடியாது.

கூற்றினை வென்றிடும் கொலைக்க ணூர்சிலர்
ஏற்றமில் பிடிமிசை ஏறிப் போந்தனர்
ஆற்றல தின்மையால் அவர்ந டைக்குமுன்
தோற்றவர் நாணியே சுமத்தல் போன்றவே.

என்னும் பாடலைப் பாடி நகைச்சுவை காண்க.

இங்ஙனம் காவியச்சுவைக்கேற்ற கவிகள் பல இருப்பதை அவரவர்கள் படித்து நனிமிக மகிழ்வாராக. இச்சுவை கண்டு பிடித்தவர் ஆங்காங்குச் சொன்மாரி பொழிந்துவரின் இன்னோ ரன்ன நூற்குத் தீங்கிழைக்க எண்ணும் எண்ணமுடையார் களை நம்வழிதிருப்ப ஏது உண்டாம் என்பது கருதிப் புராணம் படிப்பவரும் கேட்பவரும் தமது தொண்டை இடையறாது செய்துவருவதுபோல, தமிழ் அறிஞர்கள் பலர் இதுபோன்ற பல்வேறு சுவைகளைக்கண்டு பார்முழுதும் கந்தபுராணம் துலங்குமாறு செய்யவேண்டுவது கடனும். இத்தகைய சீரிய அருள்நூலை நமக்குத்தந்த பெருமானாகிய கச்சியப்ப சுவாமிகளை,

"போதமுறு சூதமுனி புகன்ற காந்தப்
புகழ்க்கடலில் படிந்ததன்கண் பொருள தான
மேதகுவண் புனல் அருந்தி வையம் உய்ய
வெய்யதுயர்ப் பிறவிஎனும் வெம்மைதீரத்
தாதவிழ்பூம் பொழிற்காஞ்சிக் குவட்டில் ஏறிச்
சலதியமு தினைநிகர்செந் தமிழ தான
காதல்மழை பொழிந்தஅருள் கொண்ட லான
கச்சியப்பன் இருபாதம் உச்சி வைப்பாம்"

என்று துதித்து வாழ்வோமாக.

# *பட்டினத்தார் நூல்கள்

வித்துவான், திரு. துரையரங்கனார் M. A., சென்னை.

பதினோராந் திருமுறையில் ஐந்து நூல்கள், பட்டினத்தார் பாடியனவாக நமக்குக் கிடைத்துள்ளன. அவை, கோயில் நான்மணிமாலை, திருக்கழுமலமும்மணிக்கோவை, திருவிடை மருதூர்மும்மணிக்கோவை, திருஏகம்பமுடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது என்பன.

பட்டினத்துப் பிள்ளையார் பிரபந்தத் திரட்டு என்ற தொகுப்பில், மேற்குறித்த ஐந்து நூல்களோடு, கோயிற்றிரு வகவல், திருவேகம்பமாலை. அருட்புலம்பல், நெஞ்சொடு புலம்பல், பூரணமாலை, நெஞ்சொடுமகிழ்தல், உடற்கூற்று வண்ணம் முதலிய தலைப்போடும், பொது என்ற தலைப் போடும் பல பாடல்கள் உள்ளன.

இவற்றுள் ஐந்து நூல்களை மட்டும் பதினோராந் திரு முறையில் காண்பதற்கு ஏதாவது காரணம் இருத்தல் வேண்டுமன்றோ! ஆராய்ந்து நோக்கினால், திருமுறையில் உள்ள பாடல்களைப் பாடினவர் வேறு, ஏனைய பாடல்களைப் பாடினவர் வேறு என்பதை உள்ளங்கை நெல்லிக்கனி எனத் தெரியலாம். இவருள் முன்னவர், காலத்தால் முந்தியவர். பின்னவர் காலத்தால் பிந்தியவர். முன்னவர் இல்வாழ் வாரும் வீட்டின்பம் எய்தலாம் என்று கூறுபவர். பின்னவர், துறவறத்தாரே அஃது அடையவல்லவர் எனக் கூறுபவர். முன்னவர், மணிவாசகர் அப்பர் முதலியோர் போன்று, தம்முடைய ஆசைக்குத் தம்முடைய நெஞ்சே காரணம் என்பதன்றிப் பெண்களைப்பழித்துக் கூறுதவர். பின்னவரோ, "பெண்ணாகி வந்தொரு மாயப்பிசாசம்", "சீறும் வினையது பெண்ணுருவாகி" என்று பெண்களைக் கண்டபடிபழித்துக்

---

* தருமபுர ஆதீனம் திருநெறிய தெய்வத்தமிழ் மாநாட்டில் 20—5—51 நிகழ்த்திய உரைக் குறிப்புக்கள்.

கூறுபவர். இதனால், பின்னவர் குறைந்தவர் என்று கூறுவதற்கில்லை. அவரிருந்தகாலத்தில் சமய நெறிநின்றார் கடைப்பிடித்த நெறி, பெண்களைப் பழிப்பதும், துறவை மட்டுமே சிறப்பிப்பதும் ஆதல். பொதுவாகத் தாழ்ந்திருந்தமையைக் காணுங்கால் அவர்மீது குறை சிறிதும் காணாது, காலத்தின் கோளாறு என்றே அமைதல் வேண்டும். மேலும் முன்னவர் எய்திய சிறப்புப் பெயரே, தமக்கு இடுகுறிப் பெயராக வைக்கப்பெற்று, அம் முன்னவர்பாடிய பாடல்களில் பெரிதும் ஈடுபட்டு, அவருடைய பாடல்களின் கருத்துக்களையும் சொற்களையும், சொற்றொடர்களையும் ஆண்டு, இறைவனைப் பாடியிருக்கும் பின்னவர் பாடல்களுள், பழித்தும் வெறுத்தும் பாடியிருக்கும் ஒரு சில நீங்கலாக, ஏனையவையெல்லாம் சிறப்புடனேயே இலங்குகின்றன.

இனி, ஈண்டுப்பதினொராந் திருமுறையிலுள்ள பட்டினத்தார் பாடல்களைநோக்குவோம். கோயில் எனப்படும் சிதம்பரம், திருக்கழுமலம் எனப்படும் சீகாழி, திருவிடைமருதூர், திருஏகம்பம் எனப்படும் காஞ்சி, திருஒற்றியூர் என்ற ஐந்து தலங்களையே பட்டினத்தார் குறித்துள்ளார் என்பது அவர் பாடியுள்ள ஐந்து நூல்களின் பெயரைக் கேட்பார்க்குத் தோன்றுமாயினும், ஏனைய தலங்களையும் அவர் குறித்திருப்பது திருவேகம்பமுடையார் திருவந்தாதியில் காணலாம். எனவே அவர் மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த்தொடங்கி, திருவைந்தெழுத்து, ஓங்காரம், மஹாவாக்கியம் இவற்றின் உண்மைப்பொருளைக் குருவருளால் உணர்ந்து, மெய்யுணர்வு பெற்றுப் பேரின்பம் உற்றார் என்பது உறுதி.

திருவைந்தெழுத்தைச் சிந்திப்பதனால் இம்மையின்பமும் மறுமையின்பமும் ஒருங்கே எய்தலாம் என்னும் உண்மையை அவர் உணர்த்தியிருக்கும் இடங்களும் வகைகளும் பலவாகும். அவற்றுள் உள்ளத்தை அள்ளிக்கொள்ளும் ஓரிடம் (திருவிடைமருதூர் மும்மணிக்கோவை பா. 19) தெவிட்டாத இன்பந்தருவதாகும்.

"புண்ணிய புராதன......திருவிடைமருத!...இவ்வுலகில் பலபல மாக்கள், மக்கள் மனைவி சுற்றத்தார் இவர்களை விட்டு, வீடும் பிறவும் துறந்து, காடும் மலையும் புகுவர்; கோடையில் கைகளை மேல் நிமிர்த்தும், ஒருகாலை முடக்கி, ஒருகாலினால், உச்சியின்மேலும் நான்கு பக்கத்தும் சுடும் ஐவகை நெருப்பின் நடுவில் நிற்பர்; மாரிநாளிலும், நீண்டபனி நாளிலும் நீரில்மூழ்கி நெடிது இருப்பர். சடையைப் புனைந்தும் தலையைப் பறித்தும், உடையைத் துறந்தும் உண்ணாது உழன்றும், காயும், கிழங்கும், சருகும், வாயுவும், எதிர்ப் பட்டன அருந்துவர். களரிலும், கல்லிலும் கண் துயில்வர்; இயல்பிலேயே நாளுக்குநாள் தளர்ந்து தேய்வுறும் யாக்கையை இவ்வாறெல்லாம் தளர்வித்து மறுமையில் முத்தி எய்துதற் காகத் தம்மைத் தாமே சாலவும் துன்புறுத்திக் கொள்வர்."

"உன் திருவடியையே சிந்தித்து வாழும் யாங்களோ, இவையெல்லாம் செய்யாமல், அழகோடு உயர்ந்த எழுநிலை மாடத்தும், பூங்காவகத்தும், தென்றல் இயங்கும் முற்றத்தும், சித்திரமண்டபத்தும், பூந்தடாகக் கரையிலும் செய்குன்றி லும் தங்கி, பஞ்சணையில் இயற்கையழகும் செயற்கையழகும் ஒருங்கே கொண்டு பக்கத்துக்கிடந்து கொச்சை மொழி பேசும் அஞ்சொல் மடந்தையர் ஆகம் தோய்ந்தும், ஓவியச் செய்கை நிரம்பிய பொற்கலத்து அறுசுவை அடிசிலிட்டு அதை யாங்கள் மட்டுமே உண்ணாது, ஆடினர்க்கும் பாடினர்க் கும் வாடினர்க்கும் வரையாது கொடுத்துப் பின் உண்டும், பூசுவன பூசியும், புனைவன புனைந்தும், உடுப்பன உடுத்தும் இவ்வாறு இம்மை ஐம்புல இன்பமும் நிரம்ப நுகர்ந்து இருந்தோம் எனினும், அந்த மறுமை முத்தியும் இழந்தோ மில்லை."

"இதன்காரணம், ஐந்தெழுத்தையும் வாயிடைமறவாது சிந்தை நின்வழி செலுத்தலேயாகும். இவ்வாறு பொறிபுலன் அடக்கம் செய்யமாட்டாத எங்களுக்கு, உறுதியாக மறுமை யின்பம் அளிப்பது உனக்கு இயல்பாக உள்ள பெருமைக் குணத்தின் மாட்சிமையே யாகும். நின் நாமமாய ஐந்தெழுத் தைச் சிந்திப்போர் நின்னை வழுவாதடைவர் என்பது நீயே

வகுத்துரைத்ததன்றே! வலிமிக்க ஒருவன் தன்வலி முழுதும் கொண்டு வீசி எறியலாம்; மாட்டாதவன் மெல்ல எறியலாம். எனினும் இருவரும் வீசிய கல் நிலத்தையே வந்துறும், அது போலவே, மனமொழி மெய்யடக்கும் ஆற்றலுடையோரே யன்றி, அவ்வாற்றல் இல்லாரும் உன்நாமம் நவிற்றின் இயல் யாகவே நுகரும் இம்மையின்பத்தோடு, மறுமை யின்பமும் வழுவாது அடைவர்.''

இவ்வாறு உணர்த்தியிருப்பதேயன்றி இன்னும் சிறப் பாகவும் அழுத்தமாகவும் வலியுறுத்தியிருப்பதைக் (கோயில் நான்மணிமாலை பா. 20.) காணலாம்.

"தில்லைமூதூர் ஆடகப் பொதுவில் கடவுட்கண்ணுதல் நடம் முயன்றெடுத்த பாதப்போதும், பாய்புலிப் பட்டும், அதன்மீது இறுகக்கட்டிய வெண்பல் அரவும், மார்பில் வெண் தலை மாலையும், அருள்பொதிந்து அலர்ந்த திருவாய்மலரும், நெற்றியில் திகழ்ந்த ஒற்றை நாட்டமும், கங்கைதங்கும் திங்க ளொளிர் சடையும் கண்ணில் பொறித்து மனத்தில் அழுத்தி ஆங்கு உள்மகிழ்ந்துரைக்க உறுதவம் செய்தனன். இத்தகைய பெறுதற்கரிய பெருந்தவப்பேறுபெற்ற எனக்கு, நான்முகன் பதத்தின்மேல் நிகழ்பதமாய சிவபதம் அரியதும் உண்டோ'' எனப் பட்டினத்தார் விளங்க உணர்த்தியிருப்பது, அவ்வாறு யாவரும் தம்மைப்போல அப்பதம் பெறுதலுக்கேயன்றே!

இத்தகைய நெறிநிற்பார்க்கு இருவினையொப்பு முதலியன தாமே வந்துறும் என்ற உண்மையைக் கோயில் நான்மணி மாலையில் (பா. 36) "ஆனச் செல்வத்து வானோர் இன்பம் அதுவே எய்தினும் எய்துக; ... நிரயம் சேரினும் சேர்க; ... ஏனோர் என்னை நல்லன் எனினும் என்க; அவரே அல்லன் எனினும் என்க; ... இன்பத் தழுந்தினும் அழுந்துக; அல்லாத் துன்பம்துதைபினும் துதைக; ... என்றும் இருக்கினும் இருக்க; அன்றி இன்றே இறக்கினும் இறக்க; ஒன்றிலும் வேண்டலும் இலனே; வெறுத்தலும் இலனே; ஆண்ட கைக் குரிசில்! நின் அடியரொடுங் குழுமித் தெய்வக்கூத்தும், நின் செய்ய பாதமும், அடையவும் அணுகவும் பெற்ற

கிடையாச் செல்வம் கிடைத்தலானே" எனப் புலப்படுத்தி யுள்ளார் பட்டினத்தடிகள்.

"எழுத்தைந்தும் ஓதுதல், உருத்திராக்கம் பூணுதல், திருநீறு பூசுதல் இன்றி இறைவன் கழல் மேவல் முடியவே முடியாது" என்பதைத் திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில் (பா. 12) அறுதியிட்டுரைத்திருத்தலும் காண்க.

தற்கால நாகரிகத்தில் மயங்கியிருப்பார்க்கு இவை யெல்லாம் மூடப்பழக்கத்தில் அடிமைப்பட்டோர் மேற் கொள்ளும் வீண்செயலாகக் காணப்படும். சித்தாந்த சாத்தி ரங்கள் எனப்படும் பதினன்கு நூல்களுள் ஒன்ருய் உண்மை விளக்கம் என்ற ஒரு நூலையேனும் ஓதினுல், இவற்றின் உண்மை புலப்படும். நுண்ணூல்களுள் ஒன்றுமே பயிலாது, தம் மனம்போனவாறு கூறுவோர்க்கு இரக்கம் காட்டுவ தன்றி யாம் வேருென்றும் செய்வதற்கில்லை. அருள் நூற் பொருள் கேட்டு, ஆண்டவன் திருவடி அடைதற்காம் செய லாற்றும் தொண்டர் வாழ்வின் சிறப்பறியார், போலியின்பங் களில் அழுந்தி அவற்றையே பெருமையாகக் கருதிப் பிறவிப் பயன்பெருது பெரிதும் ஏமாற்றம் உறுவர்.

"அரசராவதைவிடத் தில்லையம்பலத்தான் தொண்டர்க்கு ஏவல்செய்து கடைகொண்ட பிச்சைகொண்டு உண்டு இங்கு வாழ்தல் களிப்புடைத்தே" (கோயில், 2) என்றும், "உன் திருமண விழாவில், தொண்டர் பெயர் எழுதிய வரி நெடும் புத்தகத்து என்பெயரும் எழுதவேண்டுவன்; ஏனெனில், நின்னருள் ஆணைவைப்பின் காணுெணு அணுவும், கானில் வால் நுளம்பும் கருடன் ஆம் ஆதலினுல்" (கோயில், 4) என்றும், "விரும்பும் சுவை பல கலந்த உண்டி அருந்தியும், கட்டின மனைவியை விடுத்துக் கலைநலம் மிக்க காரிகையர் ஆகம் தோய்ந்தும், பிறர்க்கு ஈதல்செய்யாது தாமே நுகர்ந்தும், இகமும் பரமும் இல்லையென்று பயனென்று மில்லாது ஒழுகிப் பட்டிமை பயிற்றி, மின்னின் அனைய தம் செல்வத்தை விரும்பித் தம்மையும் ஒருவராக உன்னும் ஏனையோர் வாழ்க் கையும், இவையெல்லாம் பொருளென மதியாது உன்

அருளினை நினைந்து சித்திகள் வருங்கால் அவற்றை மதியாது ஒதுக்கிக், கீளும் கோவணமும் புனைந்து, இடுவோர் உளரெனில் ஏற்றுண்டு, தரையில் படுத்துறங்கிப் பல்லுயிரையும் ஒக்கப்பார்க்கும் நின்தொண்டர் வாழ்க்கையையும் சீர்தூக்கிப் பார்க்கின் தொண்டர் வாழ்வே ஒப்புயர்வற்றது" (திருவிடை 7) என்றும் கூறியிருப்பன, "உன் அடியார் நடுவுள்ளிருக்கும் அருளைப் புரியாய்" என மணிவாசகர் கூறியிருப்பதன் நுட்பத்தை விளக்குவனவாதல் காணலாம்.

அம்மையப்பர் காட்சியுணர்த்தும் (திருவிடை, பா. 1) திருப்பாடலில் ஒருபால் அம்மையின் கண், "பாலிற்கிடந்த நீலம்போன்று" விளங்குவது எனப் பாராட்டியிருப்பது எந்த நூலின்கண்ணும் காணப்படாததொரு சிறப்புரையாகும்.

சுருங்கச் சொல்லுங்கால் சித்தாந்த சாத்திரங்களுள் அறியலாகும் நுண்பொருள்கள் அனைத்தும், இனிய எளிய செந்தமிழ்ப் பாக்களில் விளங்க ஓதியிருக்கிறுர் பட்டினத்தார் என்று கூறிவிடலாம்.

'தில்லை அம்பலவ! திருமாலும் நான்முகனும் காண முடியாத திருவடிகள் எவரும் காணத் தில்லையில் ஆடுகின்றனை, அஃது அதிசயம் விளைக்கும் அன்றே! ஆனல் அஃதோ அதிசயம் விளைக்காது! கல்லினும் வலிது; நல்லிதிற் செல்லாது; தான் சிறிதாயினும், பொய், அச்சம், ஆசை முதலியன நிறையப்பெற்று, அவ்வாறு இருத்தலின் புகுதற்கு இடம்பெருத உள்ளத்தில், ஐந்து இந்திரியக் கள்வர் புகுந்து குயவன் திகிரியின் வேகத்தைவிட எண்மடங்கு வேகமாகச் சுழலும்படி சுழற்ற, அவ்வாறு சுற்றியபடியே இருக்கும் உள்ளத்தில் நீ நுழைந்து, செய்ய வாயும், மையமர்கண்டமும், ஒற்றை நாட்டமும், எடுத்த பாதமும், தடுத்த செங்கையும், புள்ளியாடையும், ஒள்ளிதின் விளங்க ஆடுகின்றனையே! ஈதன்றே உண்மையில் அதிசயம் விளைப்பது!" (கோயில் பா. 12) என்பது பயில்தொறும் அதிசய விருந்தளிப்பதாகும்.

# மகாலக்ஷ்மி துர்க்கை.

[சிவாகம வித்துவான், பிர்மஸ்ரீ, S. சுவாமிநாத சிவாசாரியார்,
தருமபுர ஆதீனம்.]

"एकापि शक्तिः परमेश्वरस्य
भिन्ना चतुर्धा विनियोगकाले ।
भोगे भवानी त्ववने तु विष्णुः
कोपे च काली समरे च दुर्गा ॥"

என்ற வசனத்தினுல் "பரமேச்வரனுடைய சக்தியான ஒருவளே நான்கு சக்தியாகத் தோன்றினுள். இறைவனிடத்தில் போகசக்தியாகவும், உலகைக் காப்பதற்காக விஷ்ணுசக்தியாகவும், கோபத்தில் காளியாகவும், யுத்தத்தில் துர்க்கையாகவும் தோன்றினுள்" எனக் கூறப்படுகிறது.

"துர்க்கமன்" என்ற அசுரனைக் கொன்றதனுல் துர்க்கை எனப் பெயர். **"नववर्षाभवेद्दुर्गा"** என்பதனுல் ஒன்பது வயதுடையவள் துர்க்கை எனவும் கொள்ளலாம். இந்தத் துர்க்காதேவியின் சிறப்பு ஆகமங்களில் ஒன்பதுவித வடிவத்துடன் ஒன்பது விதமான பெயரால் கூறப்படுகிறது. **சண்டீ, மகிஷமர்த்தனி** என்பது துர்க்கையின் பரியாயப் பெயர்களாகும்.

மார்க்கண்டேய புராணத்தில் கூறப்படுகின்ற தேவீ மஹாத்மியத்தில் இச் சண்டியைப்பற்றிப் பிரும்ம விஷ்ணு சிவாத்ம ஸ்வரூபையாகக் கூறப்படுகிறது. அதாவது மஹாருத்ர துர்க்கை, மஹாலக்ஷ்மி துர்க்கை, மஹாஸரஸ்வதி துர்க்கை என்பதாம். இதற்கு உரிய மந்திரத்திற்கு நவாக்ஷரீ எனப்பெயர்.

இம் மந்திரத்துக்குரியவர்களான முன்கூறிய மூன்று சக்திகளுக்குள் முதல் சக்தியான மஹாருத்ர துர்க்கைக்குப் பத்துக் கைகளும், இரண்டாவது சக்தியான மஹாலக்ஷ்மி துர்க்கைக்குப் பதினெட்டுக் கைகளும், மூன்ருவது சக்தியான மஹாஸரஸ்வதி துர்க்கைக்கு எட்டுக்கைகளும் உள்ளன.

இதனுள் பதினெட்டுக் கைகளையுடைய மஹாலக்ஷ்மி துர்க்கையை உபாசிப்பவர்களுக்கு அஷ்டலக்ஷ்மிகடாக்ஷமும், அணிமாதி சித்திகளும் உண்டாகும்; சர்வலோகங்களுக்கும் பதியாக ஆகின்ருர் என்று தேவீமஹாத்மியத்தால் அறியப்படுகிறது.

இவ்வஷ்டாதசபுஜ மஹாலக்ஷ்மி துர்க்கையின்கையில் உள்ள ஆயுதங்கள் முறையே (வலதுகை கீழ்ப்பாகத்திலிருந்து வரிசையாக இடதுகை கீழ்ப்பாகம் வரையில்) அக்ஷமாலை, கமலம், பாணம், கத்தி, வஜ்ராயுதம், கதை, சக்ரம், திரிசூலம், பரசு. சங்கம், மணி, பாசம், சக்தி, தண்டம். கேடயம், வில், பானபாத்ரம், கமண்டலம் என்ற இப்பதினெட்டும் இருக்கின்றன.

தேவீ மஹாத்மியம் - வைகிரிதிக ரகஸ்யம் என்ற பகுதியில் காண்பது வருமாறு :—

“आयुधान्यत्र वक्ष्यन्ते दक्षिणाधः करः क्रमात् ।
अक्षमाला च कमलं बाणोऽसिः कुलिशं गदा ॥
चक्रं त्रिशूलं परशुः शंखो घण्टा च पाशकः ।
शक्तिर्दण्डश्चर्मचापं पानपात्रं कमण्डलुः ॥
अलंकृत भुजामेभि रायुधैः कमलासनाम ।
सर्वदेवमयीमीशां महालक्ष्मीं इमां नृप ! ॥
पूजयेत्सर्वलोकानां स देवानां प्रभुर्भवेत् ।”

“அக்ஷமாலை முதலிய ஆயுதங்களால் அலங்கரிக்கப்பட்ட பதினெட்டுக் கைகளையுடைய மஹாலக்ஷ்மி துர்க்கையைப் பூஜிப்பவர்கள் எல்லா உலகத்திற்கும் பிரபுவாக ஆகிறார்கள்” என்பது இதற்குப்பொருள். இச்சக்தியின் தியான ஸ்லோகமாக நவாக்ஷரீ மந்திரவிதானத்தில் அடியிற்கண்டவாறு காணப்படுகிறது.

अक्षस्रक्परशूगदेषु कुलिशं पद्मं धनुः कुण्डिकां
दण्डं शक्तिमसिं च चर्मजलजं घण्टां सुराभाजनम् ।
शूलं पाश सुदर्शने च दधतीं हस्तैः प्रवालप्रभां
सेवे सैरिभ मर्दनीमिह महालक्ष्मीं सरोजस्थिताम ॥

சுரதன் என்ற அசுரன் சத்ருவின்வசத்தையடைந்து தனது ராஜ்யத்தைத் திரும்பிப்பெற, தேவியை உபாசித்து, திரும்ப ராஜ்யத்தைப் பெற்றான். சமாதி என்ற வைச்யன் மனைவி மக்களால் நிராகரிக்கப்பட்டு, பின் அம்பிகையின் உபாசனையினால் திரும்பவும் சௌஜன்யத்தையும் சுகத்தையும் பெற்றான். சாத்வீக மார்கமாக உபாசிக்கவேண்டிய இந்த துர்க்கையை யாவரும்உபாசித்து விரும்பிய பலனைப் பெறலாம் என்பது தேவிபாகவதம் முதலிய நூல்களால் அறியப்படுகிறது.

74

# மதிப்புரைகள்.

**திருவெம்பாவைக் கருத்து முதலியன:** இது திருவாவடுதுறை ஆதீன வெளியீடு. எண். 63. வேண்டுவோர் 3 அணு தபாற்றலை அனுப்பிப் பெறலாம். இவ்வெளியீடு திருவெம்பாவைக் கருத்தும் மார்கழித் திருவாதிரை வரலாறும் தத்துவக்கருத்தும் கொண்டு விளங்குகிறது. நடுவில் திருப்படையாட்சிக் குறிப்பும் தரப்பட்டிருக்கிறது. இக் கருத்து திருத்தணிகை விசாகப்பெருமாளையருடையது என்று பதிப்பாசிரியர் எடுத்துக்காட்டிய பண்பாடு மிகமிகப் போற்றற்குரியது. முன்னோர் மொழி பொருளை அவர்களுடையதாகவே பதிப்பித்து மகிழ்தல் இதன் பதிப்பாசிரியர்க்குள்ள தனிச் சிறப்பு. இங்ஙனமே இவர்கள் தற்கால முற்கால ஆசிரியர் கருத்தை அவர்கள் பெயருடன் எடுத்தாள்வது செய்ந்நன்றி மறவாத் தன்மைய. இது மிக அரியதொரு வெளியீடு.

**சிவபூசைத் திரட்டு:** இதுவும் திருவாவடுதுறை ஆதீன வெளியீடு. எண். 64. இவ்வெளியீடு ஒரு தொகுப்பு நூல். சிவபூசையில் ஸ்நானம் முதல் பூசை முடித்துப் பெட்டகக்கோயில் சாத்தும் வரையிலுள்ள பூசோபசாரங்களுக்கு ஏற்ற திருப்பாடல்கள் திருமுறைகளிலிருந்து தொகுக்கப்பெற்றுள்ளன. இதனைத்தொகுத்தவர்கள் திருவாவடுதுறை ஆதீனத்திலிருந்த ஒரு பெரியவர் என்று குறிக்கப்பட்டுள்ளது. சிவபூசை செய்பவர்கட்கு மிகப்பயன்படக்கூடிய நூல்.

மறைந்த மணிகளாகக் கிடந்த இந்த அரிய நூல்கள் இரண்டையும் மிக அழகானமுறையில் அச்சிட்டு சைவத் தமிழுலகிற்குத் தந்தருளிய திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு என்றும் தமிழுலகம் கடமைப்பட்டுள்ளது. இவ்விரு நூல்களையும் பதிப்பித்தவர்கள் அவ்வாதீன வித்துவான், திரு. த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள். ஆதீனத்தின் பதிப்புரிமை பெற்றன.

**விடைகளும் வினுக்களும்:** இது குன்றக்குடி அருள்நெறித் திருக்கூட்ட வெளியீடு. விலை அணு 2. இன்று பகுத்தறிவுலகில் கேட்கப்படும் பல வினுக்களுக்கு இவ் வெளியீடு தக்க பதிலளிக்கின்றது. மதில்மேற் பூனையாக இருந்து மதிமயங்கும் இளைஞர்கட்கு ஏற்றதுணை. இச்சிறு நூல் வாயிலாகப் பேரறிவைப் புகட்ட முற்பட்ட திருக் கூட்டத்தார்க்கு நன்றி. வேண்டுவோர் திருக்கூட்டத்திற்கு எழுதிப் பெறலாம்.

**சிதம்பர விலாசம்:** இது ஸ்ரீ காசிமடத்து மார்கழித் திருவாதிரைத் திருநாள் வெளியீடு. இந்நூல் சிதம்பர ஆலய அமைப்பைப்பற்றிய தத்துவக் கருத்துக்களைச் செவ்வனே தெரிவிக்கிறது. 145 அடிகொண்ட நிலைமண்டில ஆசிரியப் பாவால் ஆனது. செய்தவர் பெயர் முதலியன அறியக்கூட வில்லை. நூலின் பெருமையைக்கொண்டு ஆசிரியரது அறிவு நூல் ஆராய்ச்சியின் அருமை அறிந்து இன்புறுதற்குரியது. இந்நூல் சென்னை அரசாங்கக் கையெழுத்துப் புத்தகசாலைப் பதிப்பாக முன்பு ஒருமுறை வெளியிடப்பெற்றது. ஆனல் அது மூலம் மட்டுமே. குறிப்பு இல்லையாயின் நேரியமுறையில் சிரியபொருளை அறியமுடியாது. நூல், உருவில் சிறிதாயினும் சாஸ்திரப்பொருளாழமும் சம்பிரதாயக்கருவூலமும் கொண்ட தாகத் திகழ்கிறது. ஆதலால் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள், வித்துவான் திரு. பட்டுச்சாமி ஓதுவார் எழுதிய குறிப்புரையுடன் குமரகுருபரனில் தொடர்ந்து வெளிவர அருள்பாலித்தார்கள். இது இரண்டாவது முறை. இந் நூலின் இன்றியமையாமையைத் திருவுளத்தெண்ணித் தனி யாகவும் இப்பொழுது அச்சிட்டு, திருவாதிரைத் திருநாள் நினைவு வெளியீடாக வழங்குகிருர்கள். இதன் பதிப்பாளர் ஸ்ரீ வைகுண்டம் திரு. T. M. குமரகுருபரன்பிள்ளை அவர்கள், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் வரலாற்றுச் சுருக்கமும் தரப் பட்டுள்ளது. வேண்டுவோர் ஸ்ரீ காசிமடத்திற்கு எழுதி இலவசமாகப் பெறலாம்.

**தியாகராசலீலை முதற்பதிப்பு:** [விலை ரூ. 2—0—0. தபாற்கூலி தனி. கிடைக்குமிடம்:- திரு. G. ராஜகோபால்

பிள்ளை, பண்ணையாளர், பிக்ஷாண்டார் கோயில், திருச்சி ஜில்லா.] இந்நூல் இதுவரை வெளிவராத தியாகேசப் பெருமானுடைய 360 லீலைகளில் தேவலீலையாகிய முதல் 50 லீலைகள் கொண்டது. திருவாவடுதுறை ஆதீன மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் இதன் ஒரு பகுதியைச் சிறந்த காவியமாக மொழிபெயர்க்கத் தொடங்கி விரிந்த பீடிகையில் எடுத்து 14 லீலையோடு நிறுத்திவிட்டார்கள். அதற்கு மேற்பட்ட பகுதிக்கு வடமொழி ஏடு கிடைக்காமையே. திரு. ராஜகோபால் பிள்ளை அவர்கள் மகாமகோபாத்யாய அய்யர் அவர்களுடைய குமாரரான கல்யாணசுந்தரம் அய்யர் அவர்களைக்கொண்டு செப்பம்செய்து வெளியிட்டுள்ளார்கள். இது திருவாரூரைப்பற்றிய புராண வரலாற்றின் பெருந்தேவையைப் பூர்த்திசெய்யும். இந்நூல் முற்றும் வெளிவரத் தியாகேசன் திருவருள் நிறையவே ்டும். தியாகராஜா, கமலாம்பிகை திருவுருவங்கள் அமைந்திருப்பது நூலுக்குத் தனியழகு. பிர்மஸ்ரீ K. S. ராமசாமி சாஸ்திரி அவர்களும், குஹானந்தமண்டலி பிர்மஸ்ரீ N. சுப்பிரமணிய அய்யர் அவர்களும் முன்னுரையும் மெய்யுரையும் வழங்கியிருக்கிறார்கள். இந்தவெளியீடு தியாகப்பெருமானின் வழி வழி அடிமையாகிய திரு. பிள்ளையவர்களின் சிவபக்திக்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டு.

**60-வது ஆண்டு நிறைவு விழா மலர்:** திருமுறைகளாகிய கருவூலங்களிலிருந்து பன்னிருமணிகள் எடுத்து இதில் சேர்க்கப்பெற்றுள்ளன. ஒவ்வொன்றினுக்கும் வேண்டிய அளவு குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன. முதலில் திருமுறைப் பெருமையை அறிவிக்கும் ஸ்ரீ குருஞானசம்பந்தர் (தருமபுர ஆதீனப் பிரதமாசாரியர்) அருளிய சிவபோகசாரப் பாடல் ஒன்றும் தரப்பட்டுள்ளது. இதனைக் கோவை ஈசானசிவகணம் திரு. C. P. முத்துசாமி செட்டியார் தமது அறுபதாவது ஆண்டு நிறைவு விழா மலராகத் தந்துள்ளார். பணம் படைத்த பெருமக்களுக்கு இது ஓர் வழிகாட்டியாகும். ஆசிரியர் நோக்கத்திற்கு ஏற்ப அன்பர்கள் இந்த வாடா மலரைப் பெற்று ஓதி இன்பம் பெறுக.

# A short report on the Akhanda Pooja held during the consecration of the temple.

---

The Vidyalaya is mainly an educational institution. It has within it a residential High School, a Teachers, Training College, a Basic Training School, a School of Engineering, a Rural Service Centre and other institutions. The true aim of education is to develop the best in man. Nothing helps this more than the proper understanding and application of religion, The best contributions of the human mind have been through devotion to God. Our best architecture is in our temples, mosques and churches. Our greatest heights in music, art and painting have been attained in the human effort to reach the Divine. Meditation, prayer and cultivation of a true fellow feeling are the essence of religion. It is with this end in view that we have been contemplating in the last few years to build a Shrine and Prayer Hall to accommodate all the various sections of the Vidyalaya, have been built.

The real value of a temple is the sublime spirit that it must inspire. The great Shrines in the various parts of our country, like Kashi, Rameswaram, Madura and Sri Rangam whose origins date back to very ancient times have become hallowed by the devotion of millions of people in the course of many centuries. By God's grace, the temple in the Vidyalaya should also become a centre of purity, higher life and inspiration to all the people who live around it and come within its circle of influence. It must be a living torch of Light and Faith. Only deep devotion, unselfish love and constant prayer can ensure this quality in the temple. It is

in this spirit of faith and hope that an Akhanda Pooja, viz., continuous worship day and night for six days, was organized in connection with the consecration of the temple.

The Akhanda Pooja began on the 8th December 1952, the 100th birthday of the Holy Mother. Vastu Pooja began at 4-15, early in the morning. The picture of Sri Guru Maharaj was brought in procession from the old Shrine and placed in front of the new Shrine. The usual morning arati began after Vastu Pooja, at 6-15. From that moment, worship continued uninterruptedly till 6-30 P. M. on the 13th evening, the birthday of Shri Swami Shivanandaji, one of the prominent disciples of the Master.

The Akhanda Pooja consisted of two parts, one consisting of Pat, Parayanam, Bhajan, Chanting of the Vedas, Upanishads Thevaram, Prabhandam, Thiruppukazh, Arulpa, etc. The various sections of the Vidyalaya were organized into 11 Bhajan parties, five parties in the High School, two from the Basic Training School, one from the Basic Shool, one from the Middle School and two from the Teachers' College, of which one was composed of christian friends who sang Christian hymns. The whole period of time between the 8th morning till the 13th evening was divided into periods of half-an-hour or one hour each leaving sometime for the usual pujas and prayers in the mornings and evenings and for Homam on the 10th and the 13th. A detailed programme was prepared specifying the various items in the programme each day and the time for each of them. And these, in regular succession, kept the devotions going through out day and night for all the six days. For Veda Chanting, learned pandits came from Coimbatore; the head of the Chanting party in Srirangam temple came to chant Prabhandam, the Dharmapuram Mutt, well known for their work in furtherance of Saivam very kindly sent two of their best men to chant Thevaram. Shri

Tirupathy from Madura Arul Jothi Nilayam and Sri Meenakshisundaram Adigal came to chant Arulpa. Sri Murugadas Adigal chanted beautifully Tiruppukazh and other devotional songs. Some of our Swamis chanted Gita, the eleven Bhajan parties in the Vidyalaya took part in turn in singing Bhajans. The Nama Sangirthan Bhajan Party from Madhurai performed their inspiring devotional Bhajans. Thus, through out day and night, these devotions continued.

The other part of the Akhanda Pooja was Archanas. It was found on observation that to sing a thousand and eight names of the Lord took about 40 minutes. The hole time between the 8th morning and the 13th evening was divided into 40 minutes each leaving time for arati in the mornings and evenings. Parties of too each from amongst staff and students in the various sections of the Vidyalaya was arranged for doing archanas. Archanas were on Shiva, Vishnu, Subramania and mother in her varios aspects according to the desires of the people doing it. All the various sets of people came eagerly day and night to do their Archanas. 188 parties of two people each were thus arranged beforehand.

Four Akhanda Pooja Programme Executives, were appointed to lookafter the working of the Akhanda Pooja, six hours each in a day of 24 hours, of which three hours was in the day and three hours in the night. Two students helped each of them in their work, so that the various people may come and do their archanas in the allotted time.

Eight seats were arranged for Archanas in front of the Shrine where people could sit and do their Archanas quietly. As days went on, many men and woman, some from

and long distances came with great devotion to take part in the Archanas. The eight seats became insufficient and four more were aided in the last few days and these were full in the mornings and evenings. The 188 parties of two who did Archanas, should have repeated the names of the Lord 1008 times each which comes to 3,79,008. It may be safely presumed that the devotees from out-side the Vidyalaya would have done a similar amount of Archanas, which will mean that the name of the Lord has been repeated over 7,50,000 times in the course of the Akhanda Pooja. The Akhanda Pooja came to a close at 6-30 P. M. on the 13th December 1952, with the chanting of the Vedas and the singing of Kirthanas in Nathaswaram by the famous artist, Vidwan Sri. Veeruswami Pillai.

The devotions went on uninterruptedly all the time without any break any where, either in the Pats and the Parayanams or in the Archanas. Hundreds of men and women from many far off places had come to take part in this devotion bringing offerings of flowers, fruits and candys. 22 members of our order, 18 Sadhus and four Bramacharis were present on the occasion and took part in the various items.

In these six days, the 10th December and the 13th December were important, the tenth being the day on which the Prathista of the new picture of Sri Guru Maharaj in the new Shrine was done by Sri Swami Yatiswaranandaji and the 13th being Sri Swami Sivanandaji's Birthday. On both these days, there were elaborate Poojas, offerings and Homams. Pushpanjali was done by the many hundreds of people present. On these six days, there was a deep spiritual fervour present amongst the people and the whole thing was done with great devotion.

The public celebration on the 14th went off also very successfully. A record number of people attended this year. Nearly eight thousand Dharidra Narayans werefed. The Vidyalaya flag was hoisted by Sri N. M. R. Subbaraman. Swami Kailasanandaji presided. Srimati Rukmani Ammal and Sri C. Rajagopalachariar spoke on the message of the Holy Mother and Sri Guru Maharaj. About 15 thousand people attended the meeting.

A Cultural and Educational Ehibition was also arranged for the occasion which was opened by Dr. Sir K. S. Krishnan. The Exhibition was beautifully conceived. A pictorial representation of the History of religious thought in India from ancient to the modern times was a special feature of this year's Exhibition. Admission was by ticket on a payment of one anna and over four thousand peoples saw the Exhibition. The function reached its climax with the delectable music in Nathaswaram by Vidwan Sri Veeruswamy Pillai.

Special trains and special buses ran as usual. It has been calculated that over twentyfive thousand peoples had participated in the function this year.

---

## ஜன்மநக்ஷத்திரத் திருநாள்.

தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்ம நக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம்பெற்ற சிவத் தலங்களில் ஆதீனச் சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்து அவ்வத்தலப் பதிகத்தையும் அச்சிட்டு வழங்கிவருதல் போல 11—12—52 அன்று திருஅம்பர்பெருந்திருக்கோயிலிலும் 8—1—53 அன்று திருவம்பர்மாகாளத் திருக்கோயிலிலும் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்பதிக வெளியீடுகளும் வழங்கப்பெற்றன.

# கோசார பலன்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. முத்துசோதிடர், திருவிடைமருதூர்.

(நந்தனஹு தைமீ 1உ முதல் 29உ வரையில்)
(14—1—53 முதல் 11—2—53 வரையில்)

**1. மேஷம், அசுவதி, பரணி, கார்த்திகை ¼.**

அசுவதி நக்ஷத்திரம் சம்பந்த மேஷராசி பலன் பூரண சுபமாகும். ஜீவனலாபம், வியாபாரவிருத்தி, தனதான்யலாபம், சென்றவிடமெல்லாம் சிறப்பு, கீர்த்திபத்திரம் கிடைத்தல், நல்லோர் பெரியோர் ஆசி, தெய்வபக்தி, சத்கர்மா சரணம் முதலிய சுபங்கள் நடைபெறும். பரணி நக்ஷத்திரக்காரர்களுக்கு பணப்பெருக்குடன் ஆரம்பத்தில் விசேஷ சுகம்காட்டி 10உக்கு மேல் ஷை மாதம் முடிய எதிர்பாராத பல ஆபத்துக்களும் துன்பங்களும் ஒன்றன்பின்ஒன்றுகவரும். கிரிமினல் கேஸ்கள் மூலம் ஏராளமான பணச்செலவுகளும் அவமானமும் ஏற்படும். கிருத்திகை சம்பந்தப்பட்ட மேஷராசி பலன் ரோகத்தையும் நஷ்டத்தையும் தரும். நாஸ்தீகராகில் எல்லாவற்றிலும் மூன்று நக்ஷத்திரக்காரர்களும் ஜயித்து, கடைசியில் பெரியதுக்கத்துக்கு உள்ளாவார்கள். புதன் சனி சுபவாரமாகும்.

**2. விருஷபம். கார்த்திகை, ¾ ரோஹிணி, மிருகசீரிஷம் ½.**

ரோஹிணி மிருகசீரிஷம் இரு சம்பந்தப்பட்ட நக்ஷத்திர பலன் மிசிரமாகும். வியவசாயத்தில் நஷ்டமும் சுகமும் கலந்து காட்டும். எதிர்பார்த்ததைவிட தனதான்யலாபங்கிடைக்கும். ஆஸ்திகபுத்தியோடு லோபத்தன்மையும் துரோஹசிந்தனையும் தரும். ஒரு வியாபாரியால் ஆரம்பத்தில் லாபமும் பின்பு இரட்டிப்பு நஷ்டமும் தரும். ரோகபீடைகள் உண்டாகும். கார்த்திகை சம்பந்தப்பட்ட விருஷபராசி பலன் நலன் இராது. சுபமும் இராது. சதா கவலையையே கொடுக்கும். புதனும் சனியும் சுபவாரமாகும்.

**3. மிதுனம். மிருகசீரிஷம் ½, திருவாதிரை, புனர்பூசம் ¾.**

திருவாதிரை சம்பந்தமான மிதுனராசி பலன், சற்று நலன் காட்டும். பணப்புழக்கம், தொழில் மேன்மை, பெரியோர் அன்பு, ஆரோக்கியம், இல்லறசுகம் இவைகள் தரும். மிருக

சிரிஷம் புனர்பூசம் இரு நக்ஷத்திரபலனும் படுமோசமாகும். வியவசாயியாகில் ஈதிபாதைகள் ஏற்பட்டு, தான்யசேதமும் தொழிலாளிகளால் கலஹமும் பெருத்த அவமானமும் ஏராள செலவும் ஆரோக்கியக் குறைவும் ஏற்படும். நாஸ்திகமில்லாம லிருப்பவர்கள், தெய்வபலத்தால் காப்பாற்றப்படுவார்கள். சனியும் வியாழனும் சுபவாரமாகும்.

4. **கடகம்.** புனர்பூசம் ¼, பூசம், ஆயில்யம்.

ஆயில்யம் சம்பந்தப்பட்ட கடகராசி பலன் கஷ்டத்தி லிருந்து விடுபடுதலையும், எதிர்பாராத சில மனுஷ்யாள் அனுகூல மாக இருத்தலையும், பந்துமித்திராளுடைய ஒத்தாசையையும், மனதுக்குச் சாந்தியையும் தரும். புனர்பூசம் பூசம் இருநக்ஷத்திர பலனும், ரோகத்தையும் இடம் மாறலையும் சத்துருக்களால் கலகத்தையும் கிரிமினல் கேசுகளையும் பெருத்த நஷ்டத்தையும் அபவாதங்களையும் உண்டுபண்ணும். தெய்வபலமே இராது. காலத்துக்குத் தக்கபடி மனம் மாறுதல் கெட்டகாரியத்திலேயே பிரவர்த்திக்கும். சனியும் செவ்வாயும் அசுபத்தைத்தரும்.

5. **ஸிம்மம்.** மகம், பூரம், உத்திரம் ¼.

இம் மூன்று நக்ஷத்திரம் சம்பந்தப்பட்ட பலன் சென்ற மாதம்போலவே இருக்கும். பூர்ணமாகச் சுபத்தைத் தரும். உத்யோக லாபம், இடம் மாறல், தூரயாத்திரை, நஷ்டதன வரத்து, காலிகன்று வாங்கல், வாஹன பிராப்தி, சத்கர்மா சரணம் முதலிய சுபங்கள் ஏற்படும். மாதக்கடைசி ஐந்து தினங்களில் சொல்ப நஷ்டமும் காரியவிக்னமும் தரும். சனி வியாழன் புதன் சுபமாகும்.

6. **கன்னி.** உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½.

சென்ற மாதம்போலவே உத்திரத்துக்கும் சித்திரைக்கும் சுபபலன்நடக்கும். உத்யோகலாபம், கீர்த்திபத்திரம்கிடைத்தல், சஞ்சாரபலன், ஆரோக்கியத்துடன் ஸ்வஸ்தானவாசம், தன தான்ய லாபம், ரிணநிவர்த்தியாதல், சத்துரு நாசமடைதல், வியவஹார ஜயம் முதலிய சுபங்கள் ஏற்படும். ஹஸ்த நக்ஷத் திரம் சம்பந்தப்பட்ட கன்னியாராசி பலன் விசேஷமான செலவின்பேரில் சந்தோஷத்தைத்தரும். தெய்வபலம் கிட்டும்.

யஞ்ஞயாகாதி பிரதிஷ்டா பலன்களும், அசாத்தியமெல்லாம் சுலபமாகச் சாதித்தலும், ராஜாங்கமைத்திரமும், ஈதிபாத நிவாரணமும், சத்துருமைத்திரமும் ஏற்படும். மத்தியில் துஸ்ஸஹவாசமும் காட்டி மனமாறுதலையும் தேவகோபத்தையும் தந்து, பிறகு ஆத்மபலத்தால் தவறு உணர்ந்து சன்மார்க்க பிரவிருத்தியை உண்டுபண்ணும். குருவாரமும் சுக்கிரவாரமும் நலன் காட்டும்.

## 7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, சுவாதி, விசாகம் $\frac{3}{4}$.

சுவாதி நக்ஷத்திர பலன் பூரணமாக சுபத்தைத்தரும். நஷ்டதன பிராப்தி, தொழில் விருத்தி, கீர்த்திபத்திரம் கிடைத்தல், மேலோர் பெரியோர் நேசம், ராஜசபா பிரவேசம், நன்மதிப்பு, தெய்வசக்தி தோன்றல், கஷ்டங்கள் விலகல், கிரஹபூமி லாபங்கள், மனோல்லாசம் முதலிய சுபங்கள் ஏற்படும். சித்திரைக்கு மிசிரபலனாகவும் விசாகத்துக்குப் பூர்ண அசுபமாகவும் இருக்கும். ஷை இரு நக்ஷத்திரக்காரர்களும் எதிலும் ரொம்ப ஜாக்கிரதையாய் நடந்துகொண்டால் நலன்கிட்டும். சனியும் சுபமாகும்.

## 8. விருச்சிகம், விசாகம், $\frac{1}{4}$, அனுஷம், கேட்டை.

இந்த மூன்று நக்ஷத்திரங்களுமே சுபத்தைத்தரும். ரோக நிவர்த்தியாகுதல், சத்துரு மைத்திரமாகுதல், கடன் ஒழிதல், உத்யோக லாபம் மாத்தலுடன் ஏற்படுதல், வியாபாரவிருத்தியாகுதல், தனதான்ய சேர்க்கை செய்தல். ரத்னாபரணம் செய்வித்தல், சுபசோபனாதிகள்மூலம் செலவு செய்தல், கட்டடம் கட்டுதல் முதலிய நன்மைகளே ஏற்படும். புதன் வியாழன் நலன் தரும்.

## 9. தனுசு. மூலம், பூராடம், உத்திராடம் $\frac{1}{4}$.

பூராடத்துக்கும் உத்திராடத்துக்கும் மாதக்கடைசியில் லாபம் தரும். குடும்பத்தொல்லை ஒருவாறு நீங்கும், உபகாரம் கிட்டும், தெய்வபலம் பிரகாசிக்கும், மேலோர் அன்பும், சத்கர்மாசரண பலனும், தானதர்மபலப் பிராப்தியும் ஏற்படும். மூல நக்ஷத்திர பலன் மிசிரமாகும். ரோக நிவர்த்தியாகும், அதிக விரயமும் ஒருவாறு மனம் சாந்தியும் அடையும். செவ்வாயும் சனியும் சுபமாகும்.

**10. மகரம்.** உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம், அவிட்டம் $\frac{1}{2}$,

மகரராசி பூராவுமே, மூன்று நக்ஷத்திரக்காரர்களுக்கும் நலன்தரும். வித்யாவிருத்தி, தொழில் மேன்மை, உத்யோக லாபம், வியவசாயத்தில் விசேஷ லாபம், ஆஸ்திகபுத்தி, நல்லோர் பெரியோர் நேசம், அடிக்கடி சஞ்சாரபலன், தூரதேசத்தி விருந்து அழைப்புக் கடிதம், இல்லறசுகம், காரியசித்தி முதலிய சுபங்கள் நடக்கும். சனி புதன் சுபவாரமாகும்,

**11. கும்பம்.** அவிட்டம் $\frac{1}{2}$, சதயம், பூரட்டாதி $\frac{3}{4}$,

இம் மூன்று நக்ஷத்திரபலனும் சுபத்தையேதரும். வாஹன லாபம், யோகாப்பியாசம், யஜமானத்துவம், வியாபாரலாபம், தனதான்யலாபம், காலிகன்று சேர்க்கை, சேவகஜனவிருத்தி, மனோதைரியம், தீர்த்தயாத்திரை, ஞானசாஸ்திராப்பியாசம், தெய்வபக்தி, சர்வஜன ஆதரவுகள், களத்திரபுத்திரசுகம், சுப சோபனுதிகள், சந்தோஷம் இவைகள் ஏற்படும். சனியும் புதனும் சுபவாரமாகும்.

**12. மீனம்.** பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி, ரேவதி.

மீனராசி பலன் மூன்று நக்ஷத்திரக்காரர்களுக்கும் அதிக சிரமத்தோடு நலன்தரும். தொழில் ஓங்கும், வியாபாரம் வலுக்கும், ஒத்தாசை ஏற்படும், உத்யோகம் லாபம் தரும். ஆனல் அதிகமாக உழைப்பு ஏற்படும். எந்தக்காரியமும் ஆரம் பத்தில் கஷ்டமாகத்தோன்றி, பின்பு சுபத்தையேதரும். தெய்வ பலம் பிரகாசிக்கும். நஷ்டமான பொருள் வரத்து ஏற்படும். வியவஹாரம் ஜயிக்கும். சத்துரு நாசம் ஆகி ஸஜ்ஜனசேர்க்கை ஏற்படும். அடிக்கடி அலைச்சலுடன் காரியசாதனம் ஏற்படும். வியாழனும் புதனும் சுபவாரமாகும்,

குறிப்பு:— கோசாரபலன் தசாபுக்தி பலனை அனுசரித்தே நடக்கும். உலக ஜாதகப்படியும் சுபாசுபங்கள் ஏற்படும். உலகத்தின் கிரக அமைப்புக்குப் பிரஜைகளின் தர்மாதர்மமே காரணம். இக்காலம் அதர்மமே ஓங்கி நடப்பதால் கிரகங்களின் அமைப்பும் மாறுகிறது. அநேகம் உத்பாதங்களும் துர்பிக்ஷமும் காட்டக்கூடியதாகஇருப்பதால் ஸஜ்ஜனங்கள் தெய்வசக்தியைப் பிரார்த்தித்து, நல்வழியில் நடந்துகொண்டால் உலகம் சுபிக்ஷ மடையும். அசுபபலன்கள் மாறும், சுபபலன்கள் அதிகமாகும்.

## மஹாசிவராத்ரி நிர்ணயம்

तिथिद्वयेतु संप्राप्ते मासादौ प्रथमेऽहनि ।
मासान्ते तु त्रयोदश्यां चतुर्दश्या युतंतु वा ।
पूर्वे तु कथितं श्रेष्ठं अन्तं मध्यममुच्यते ॥

—உத்தாகாரணம்.

**(இ-ள்:)** மாதத்தின் முதல் தேதியிலும், கடைசித் தேதியிலுமாக இரண்டு சிவராத்ரி, திரயோதசி சதுர்த்தசி சம்பந்தத்துடன் வந்தால், முதலில் உள்ள சதுர்த்தசி சிவராத்ரிதான் உத்தமம். பின் உள்ளது மத்யமம்.

இவ்வாண்டு மாசிமீ 1௳ குருவாரம் திரயோதசி திதி 12-57 நாழிகைக்குமேல் சதுர்த்தசி திதி வந்து 2௳ சுக்ரவாரம் காலை நாழிகை 7-47 வரையில் இருப்பதாலும், சிரவண நக்ஷத்திரம் கூடியிருப்பதாலும் உத்தமம்.

ஷைமீ 3௳ சுக்ரவாரம் திரயோதசி திதி 38-24 நாழிகைக்குமேல் சதுர்த்தசியும் உதயாதி 53-5க்கு மீனரவியாதலால் 4-வது ஜாமத்திற்குப் பங்குனிமீ பிறப்பு ஏற்பட்டு விடுவதால் மத்தியமம்.

ஆதலால் இவ்வாண்டு மஹாசிவராத்ரி பூஜை ஆலயங்களிலும் ஆன்மார்த்த பூஜைகளிலும் மாசிமீ 1௳ (12-2-53) குருவாரம் செய்வது உத்தமம்.

இப்படிக்கு,
**S. சுவாமிநாதசிவாசாரியர்,**
தலைமை ஆசிரியர்,
வேதசிவாகம பாடசாலை, தருமபுரம்.

எனவரும். இவற்றுட் பரன் கனவு கால பரஞ் சுழுத்தி பரவியோமத்துரியத்திற் பரமசாக்ஷியாதல் வந்தவாறு கண்டு கொள்க, இனி சிவதுரியத்திற் பிரகிருதியைக் கண்டதனு லொழிந்து போனதன்றே; பின்னுமொழியாதிருந்து பரசாக் கிரத்திற் காரணவுபாதியுண்டென்ன......ம்...மாயையெனும் பிரகிருதியானது பரனுக்குபாதியானதென்னில் அப்பிரகிருதி தீர்ந்து வாசனையாலிருந்து பரசாக்கிரத்திற் பரனுக்குபாதி யாம் என்க. அது திருமந்திரத்தில்,

காய்ந்த விரும்பு கனலை யகன்றாலும்
வாய்ந்த கானலென வாதனை நின்றாற்போல்
ஏய்ந்த கரண மிறந்த துரியத்தும்
தோய்ந்த கரணத் துரிசகலாதே. 2309

எனவும், தத்துவாமிருதத்தில்,

இதமுறு தூலபாவத் திடர்ப்படு பேத நீங்கி
விதமுறு முயிராஞ் சித்தில் விட்டவா தனையங்குண்டு
பொதுவறு சுத்தபாவத் தகமுறு புணர்ப்பு நீங்கி
மனபாலுமவிரி ......வநாதனை வந்தே.

... ... ... ...
யெழுமிந்தச் சரீரத்திலேதானே அது
... யெனவே நியதம
... பொருளெல்லா... (உ)ணர்தல்.

என மேற்கூறுமாற்றால் விளங்கும். இவ்வாறு அது ஞான சித்தியில்,

ए ... तत्वकः ।
त्रिवह्यकीं व्रह्मार्थमेकीभावस्थितं नहि ॥
तस्मात् ... प्रज्ञा तदात्मा परसंस्थितः ।
तत्कालप...ना त्वस्यकारणम् ॥
प्रज्ञाभावसंसिद्धं शुद्धकेवलसंस्थितम् ।

என வருமாற்றானுணர்க. அன்றி நிராமயதேவர் நூலில்,

உணர்ந்திடு மிதுவே யான்ம சுத்தமா மென்ன வுன்னித்
தணந்திடு ... ம் யானென் ... மென்னக்
குணம்பெறு மைந்தன் கொள்கைகொ னின்று நீவி
யிணங்கலொன் றிலாத கால பரத்தனு யேகனுனன்.

அசைவுற்று முன்னு வசைவுற்று நின்ற வசைவான காலமாம்
மிசைவுற்று நின்ற விசைசற்றுமின்றி மிகுதத்வசால மிதனோ
டொசிவுற்ற மாயை யுயிரால்வி லாச முடனுன தூடணம்விடா
னசைவுற்று நின்ற நிலைகாண்வி கார மெனலாம்நனுவ திதமே.

எனவும் வருமாறு கண்டுகொள்க. இறுதியிற் றுரியதெரி சனம் வந்தவாறு காண்க. நனுவிலதீதமென்பது ஈண்டுத் தொடை நோக்கி யதீதமெனக் குறைந்து நின்றது ஈண்டுக் கூறிய முன்னதனுட் காலபரத்தனுயேகனு னென்றமையிற் பரத்தோடு சீவனைக் கூட்டிக் காலபரங் கல்ப்பிக்குமென்பது திருமந்திரத்தில்,

என்னை யறிந்திலெ னித்தனை காலமும்
என்னை யறிந்தபி னேது மறிகிலேன்
என்னை யறியும் அறிவை யறிந்தபின்
என்னையிட் டென்னையு சாவுகின் றேனே. 2366

எனவும்,

அறிவு வடிவென் றருள்செய்தா னந்தி
அறிவு வடிவென் றருளா லறிந்தேன்
அறிவு வடிவென் றருளா லறிந்தபின்
அறிவு வடிவென் றறிந்து மிலேனே. 2357

எனவும்,

துரிய தெரிசனஞ் சொற்றூம் வியாத்தி
யரியன தூடணம் பின்னன வாதி
பெரியன கால பரம்பிற் றுரிய
மரிய வதீத மதியத்த தாமே. 2225

கால பரத்தி லசைந்துந் துரியத்துச்
சால விரிந்துங் குவிந்துஞ் சகலத்தில்
ஆயி னவற்று றுறடைந்துந் திரிந்தேற்குத்
தூய வருடந்த நந்திக்கென் சொல்வனே.

எனவும் வருமாற்றான் உணர்க. இனிப் **பரவியோமம் பரம்** என்பதற்கு வருமாறு. ஞானசித்தியில்,

जाग्रं तुर्यं चतुर्थं च तत्कालंपरपञ्चमम् ।
परव्योमं तु षष्ठं च परावस्था तु सप्तमम् ॥

எனவும்,

परमव्योम्नि सिद्ध्यर्थं जीवन्मुक्तिप्रकाशकम् ।
तत्प्रकाशक चैतन्यं परमात्मन्यवस्थितम् ॥
परावस्था प्रकाशस्तु अवस्थातीत गोचरम् ।
आकाशशरीरं ब्रह्म तुर्यातीतं परं शिवम् ॥

எனவும் வருமாற்றானுணர்க. இவ்வாறு திருமந்திரத்திலும்,

தற்பர மன்னுந் தனிமுதற் பேரொளி
சிற்பரந் தானே செகமுண்டம் போதமுந்
தொற்பதந் தீர்பாழிற் சுந்தரச் சோதிபுக்
கப்புற மற்றதிங் கொப்பில்லை தானே. 2462

துரிய நனவா மிதமுணர் போதந்
துரியக் கனவா மகமுணர் போதந்
துரியச் சுழுத்தி வியோமந் துரியந்
துரியம் பரமெனத் தோன்றிடுந் தானே. 2205

என வரும். இனித் தத்துவாமிருதத்தில்,

பரமன்றன் சுழுத்தி தன்னைப் பழமறை பரவியோமம்
பிரிவுறத் திகழாக ... சரீரம் நற்பிரமமென்றே
யுரவிய பரமான் மாவி னுபாதிசொல் லுதலாலத்தைத்
துரிசற்ககழ் ... சித்தேசுத்த ... த்த மாமே.

எனப் பரவியோமத்தியல்பு வருமாறு காண்க. இனிப் பரன் கனவிற் படைப்பாதி மூன்றுமுண்டெனப் பெரும்பான்மை பகுத்தோதாமையின் சிவதுரியத்திற் சான்றாயிருந்தபோதமே காரணமாயோபாதிகளாற் சர்வஞ்ஞத்துவாதி யேழு நிகழ நின்றவிடம் பரசாக்கிரம். அவை மழுங்கி நின்ற விடம் கனவும், அந்த வசைவுமற வொடுங்குதல் சுழுத்தி யெனினு மாம். அது பரிபூரணசித்தியில்,

சான்றென விரிந்த போதம் சாக்கிரந் தான் ...
ரேன்றுத ருன்மழுங்கல் சொற்பனஞ் சொன்ன வித்தி
லூன்றிய வசைவுதீர வொடுங்குதல் சுழுத்தி யிந்த
மூன்றுமே பரனவித்தை யெனமொழிந் திடுவர் மேலோர்.

எனவும், தத்துவாமிருதத்தில்,

ஓதிய சகல ஞான திகளெலா மொளிருந் தேய
மேதது பரமன் றன்சாக் கிரமதா மழுங்கிற் றெங்கே
யாதது பரமன் றன்பாற் கனவதா மாண்ட தெங்கே
யோதிய பரமன் றன்பா லுபாதியாஞ் சுழுத்தி காணே.

எனவும் வருமாற்றானுணர்க. "சிருட்டி திதி யொடுக்கம் அப்படியா மூன்றினொடுமாதல் பரங்கனவாமது கால பர மாகும்" என்புழி முன்னான்குமன்றிச் சிருட்டியாதி மூன்று நிகழாமையின் அவ்வேழுங்கூடிக் காலபரத்தில் அசைந்து மழுங்கின வவதரங் கனவென்ப. திருமந்திரத்தில் "கால பரத்திலசைந்து" என்றது இந்த மழுங்கலாகிய வாசனையைப் பண்ணுமுபாதி காலபரமென்றுமாம். பிறவும் விரித்துணர்ந்து கொள்க. 41

. . . . . . . . . . . . . . . . . . . .

42. . . . . . . . . . . . . . .

தன்மயம் என்பது சிவசாக்கிராதி நான்கவத்தைகளும் கூறுமுகத்தாற் சூக்குமப் பிரணவாதிகட்கு வருமவத்தா பேதங்களும் இவ்வாறென்கின்றது. அது ஞானசித்தியில்,

தருமபுர ஆதீனம் 2-வது மகாசந்நிதானம்

# ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிகர் குருபூஜை

உள்ளன்போடு வேண்டுவார்க்கு வேண்டியது அளிக்கும் கண் கண்ட தெய்வமாக எப்பொழுதும் விளங்கிக்கொண் டிருக்கும் ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவசதேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழா 3—1—53 சனிக்கிழமை மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. அருட்குருமூர்த்தியின் திருக்கோயிலின் முன்புறம் இசை நிகழ்ச்சி முதலியன நடைபெறப் பெரிய கொட்டகை அமைக்கப்பட் டிருந்தது. மகரதோரணங்களாலும், வண்ணச் சீலைகளாலும் அது அலங்கரிக்கப்பெற்றிருந்தது. மின் விளக்குகளும் வைத்து, ஒலிபெருக்கிச் சாதனமும் ஏற்பாடு செய்திருந்தது.

முதனாள் 2—1—53 மாலையே விழா ஆரம்பமாயிற்று. 6 மணி முதல் 7-30 வரையில் ஆதீனத் தேவாரப் பாடசாலை, இசைக்கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும் திருமுறைப் பாராயணம் நிகழ்த்தினார்கள், அதற்குமேல் குருமூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனை நடந்தேறியது. குழந்தைகட்குப் பிரசாதங்கள் விநியோகிக்கப்பட்டன.

மறுநாள் வழக்கம்போல் விடியலில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள், மடாலயத்தில் ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானுக்குத் திருப் பள்ளியெழுச்சி பூஜை முடித்து, அடியார் கூட்டத்துடன் எழுந்தருளினார்கள். ஆகம முறைப்படி அபிஷேக அலங்கார ஆராதனை செய்து வழிபாடாற்றினார்கள். அடியார்களும் அன்பர்களும் குருவழிபா டாற்றி அருட்பிரசாதம் பெற்றார்கள். இவைகளெல்லாம் முடிந்த பிறகு சொற்பொழிவுகள் நிகழ்ந்தன, 1 மணிக்கு மடாலயத்தில் மாகேஸ்வர பூஜையும் நடைபெற்றது. மாலை 5 மணிக்கு மீண்டும் பிரசங்கங்கள் நிகழ்ச்சியிற் குறித்தபடி தொடங்கி நடைபெற்றன 7 மணிக்குமேல் இன்னிசையரங்கும் நடைபெற்றது. இரவு மணி 9 ஆயிற்று. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தரிசனத்திற்கு எழுந் தருளி வழிபாடாற்றி, அனைவர்க்கும் அருட்பிரசாதமும் குருபூஜை விழாமலராக அச்சிட்ட பண்டார மும்மணிக்கோவை என்ற அருள் நூல் வெளியீட்டினையும் வழங்கினார்கள்.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், இளவரசு வித்துவான் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், விஜயமாகி குருமூர்த்த வழிபாடு செய்தருளினார்கள். பிறகு ஸ்ரீலஸ்ரீ மகாசன்னி தானம் அவர்களைத் தரிசித்து, ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் ஆலயத் திற்கும், ஸ்ரீ ஞானபுரீஸ்வரர் ஆலயத்திற்கும் சென்று வழிபாடு செய்தார்கள்.

## நிகழ்ந்த சொற்பொழிவுகள்.

திருவாரூர் கட்டளை விசாரணை, ஸ்ரீமத். சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள், 'சிவபோகசாரம்' திருச்சி மலைக்கோட்டை கட்டளைவிசாரணை, வித்துவான், ஸ்ரீமத். இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள், 'சொக்கநாத வெண்பா' திருக்குவளை கட்டளை விசாரணை, வித்துவான் ஸ்ரீமத். மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், 'முப்பொருள்' சீகாழி கட்டளை விசாரணை, வித்துவான் ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், 'வந்துமுந்துமின்' திருக்கடவூர் கட்டளைவிசாரணை, ஸ்ரீமத். சுவாமி நாதத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள், 'பழுக்கந்தவிரப்பழுகுமின்' தருமபுர ஆதீனக்கல்லூரித் துணைத்தலைவர், வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள், 'குருஸ்தோத்திரம்' ஆதீனக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், புலவர், திரு. முத்து. சு. மாணிக்க வாசக முதலியார் அவர்கள், 'மனமே உனக்கென்ன வாய்' ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர், வித்துவான், திரு. V. S. குருசாமி அவர்கள் 'கிளியே! கேள்' ஆதீனக்கல்லூரிப் பேராசிரியர், வேதாந்தசிரோ மணி, பிர்மஸ்ரீ. K. இராஜகோபால சாஸ்திரிகள் அவர்கள், 'சிவோத்கர்ஷம்' ஆதீன ஆகமபாடசாலைத் தலைமை ஆசிரியர், சிவாகம வித்துவான், சிவஸ்ரீ. S. சுவாமிநாதசிவாசாரியார் அவர்கள், 'சிவாகமப்பிரபாபம்' ஆதீனக்கல்லூரிப் பேராசிரியர், வித்துவான், திரு. M. ஆறுமுக தேசிகர் அவர்கள், 'குருபக்தி' ஆதீன ஆகமபாட சாலை ஆசிரியர், வியாகரண சிரோமணி, சிவஸ்ரீ. சுப்பிரமணிய குருக்கள் அவர்கள், 'காளிதாஸனும் சைவமும்' ஆதீன ஓரியண்டல் ஹைஸ்கூல் தலைமையாசிரியர், பிர்மஸ்ரீ N. வேங்கடராம அய்யர் அவர்கள், 'அடியவர் இயல்பு'.

இசையரங்கு.- ஆதீன இசைக்கல்லூரி இசையாசிரியர். தேவார இசைமணி, சங்கீதபூஷணம், திரு. P. சுவாமிநாதமுதலியார் அவர்கள் பாட்டு, ஆதீன இசைக்கல்லூரித் தலைவர், திரு. T. S. சம்பந்தம் பிள்ளை அவர்கள், பிடில், ஆதீன இசைக்கல்லூரி ஆசிரியர், ஸ்ரீ R. விசுவநாத அய்யர் அவர்கள், மிருதங்கம்.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram, (Mayuram) 9—1—1953